விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු






வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 24.03.2021 புதன்கிழமை | இதழ் : 114 | பக்கங்கள் : 16


06
மாகாணத் தேர்தலுக்கு உடனே தயாராகுங்கள்!


08
வெற்றிபெறப் போவது யார்?


11
அரசு இரட்டை வேடம்! எதிர்க்கட்சி குற்றச்சாட்டு


13
தொடரை வென்றது நியூஸிலாந்து அணி!

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றம்

## ● 22 நாடுகள் ஆதரவு ● 11 நாடுகள் எதிர்ப்பு
## ● இந்தியா உட்பட 14 நாடுகள் நடுநிலை


Item 2: L.1/Rev.1 "Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka"

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Y | ARGENTINA | N | ERITREA | Y | NETHERLANDS |
| Y | ARMENIA | Y | FIJI | N | PAKISTAN |
| Y | AUSTRIA | Y | FRANCE | N | PHILIPPINES |
| Y | BAHAMAS | A | GABON | Y | POLAND |
| A | BAHRAIN | Y | GERMANY | Y | REPUBLIC OF KOREA |
| N | BANGLADESH | A | INDIA | N | RUSSIAN FEDERATION |
| N | BOLIVIA (PLURINATIONAL STATE OF) | A | INDONESIA | A | SENEGAL |
| Y | BRAZIL | Y | ITALY | N | SOMALIA |
| Y | BULGARIA | A | JAPAN | A | SUDAN |
| A | BURKINA FASO | A | LIBYA | A | TOGO |
| A | CAMEROON | Y | MALAWI | Y | UKRAINE |
| N | CHINA | Y | MARSHALL ISLANDS | Y | UNITED KINGDOM OF GREAT BRITAIN AND NORTHERN IRELAND |
| Y | CÔTE D'IVOIRE | A | MAURITANIA | Y | URUGUAY |
| N | CUBA | Y | MEXICO | N | UZBEKISTAN |
| Y | CZECH REPUBLIC | A | NAMIBIA | N | VENEZUELA (BOLIVARIAN REPUBLIC OF) |
| Y | DENMARK | A | NEPAL | | |

IN FAVOUR 22 | AGAINST 11 | ABSTAIN 14

ஜெனிவா, மார்ச் 24

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்துக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்தன.

15

## யாழ்ப்பாணத்தில் 21 பேர் உட்பட வடக்கில் 23 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடக்கு மாகாணத்தில் மேலும் 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது. இதில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் 21 பேர் கொரோனா நோய்த் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்

15

## யாழ். நகர் மரக்கறிச் சந்தை மறுஅறிவித்தல் வரை மூடல்!

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். நகரிலுள்ள மரக்கறிச் சந்தைத் தொகுதி மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

15

## உள்விவகாரங்களில் தலையிடாதீர்கள்!

### ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாக சீனா கருத்து

ஜெனிவா, மார்ச் 24

மனித உரிமைகள் என்ற பெயரில் இவ்வாறான தீர்மானங்கள் மூலம் ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதை தாங்கள் எதிர்ப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் தெரிவித்த சீன அரசின் பிரதிநிதி, இந்தத் தீர்மானத்தை தாங்கள் ஆதரிக்கவில்லை என்று கூறினார்.

பிற நாடுகளும் இந்த தீர்மானத்துக்கு எதிராக

15

## 22 நாடுகள் மட்டுமே ஆதரித்தன 25 நாடுகள் ஆதரவளிக்கவில்லை!

### ஜெனிவா பிரேரணை குறித்து தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, மார்ச் 24

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 47 நாடுகளில் 22 நாடுகளினுடைய ஆதரவினை மாத்திரமே மனித உரிமை பேரவையினால் பெற்றுக்கொள்ள முடிந்தது. 25 நாடுகளினுடைய ஆதரவினை பெற்றுக்கொள்ள முடியவில்லை. 11 நாடுகள் அந்த யோசனைக்கு எதிராக வாக்களித்தன. ஏனைய 14 நாடுகள் தமது வாக்குகளை பிரயோகிக்கவில்லை" என வெளிவிவகார அமைச்

15

## மண்ணெண்ணெய் விலை உயரும்?

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் மண்ணெண்ணெயின் விலையில் அதிகரிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விலையை 10 வீதத்தால் அதிகரிக்க அனுமதி கோரி எரிசக்தி அமைச்சு அமைச்சரவைக்கு அறிக்கை அளித்துள்ளது.

மண்ணெண்ணெய் மானியத்தை திருப்பிச் செலுத்துவதற்கும், கச்சா எண்ணெய் மீதான துறைமுகம் மற்றும் விமான நிலைய வரியை திருத்துவதற்கும் பெப்ரவரி மாதம் எரிசக்தி அமைச்சு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தது.

இதற்காக பொருத்தமான ஒரு பொறிமுறையை அமைக்க பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் குழு நியமிக்கப்பட்டது.

15

## தமிழர்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள்

### இந்திய நடுநிலையை கண்டிக்கும் ஸ்ராலின்



சென்னை, மார்ச் 24

ஜெனிவாவில் இந்தியா வாக்களிக்காமல் தவித்ததை, "தமிழர்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள்" என திமுக தலைவர் மு.க.ஸ்ராலின் கடுமையாகச் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் தளத்தில் பின்வருமாறு

15

## மாகாண சபை தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும்!

### மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வலியுறுத்து

ஜெனிவா, மார்ச் 24.

மாகாணசபை தேர்தல்கள் விரைவில் நடத்துதல் மற்றும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் வலியுறுத்தியுள்ள இந்தியா, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பொருத்தமான தீர்மானங்களிற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என வேண்டு

15

## 22 நாடுகள்...

சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருக்கின்றார்.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் நேற்று மாலை வாக்களிப்பு முடித்தபின்ன ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அதனுடைய அடிப்படை கொள்கைக்கு புறம்பாகச் செயற்பட முடியாது. ஒரு நாட்டுக்கெதிராக ஐக்கிய நாடுகள் சபையில் பிரிட்டன், ஜெர்மனி போன்ற நாடுகள் கொண்டுவந்துள்ள பிரேரணையை நிறைவேற்ற முடியாது. இந்த குற்றச்சாட்டுகள் அடிப்படை தன்மையற்றவையாகும், ஏனெனில் நாம் முன்னராகவே இது தொடர்பில் கூறியிருந்தோம், இந்த நிலையிலேயே குறித்த பிரேரணை ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இருப்பினும் ஜெனீவாவினால் எம்மை வெற்றிகொள்ள முடியவில்லை. அத்துடன் கொரோனா நிலைவரத்திலும் கூட இந்த விவகாரம் தொடர்பில் ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம். அதே போன்று மனித உரிமை மீறல்கள் நாட்டில் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பில் முறைப்பாடு செய்ய ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்திருந்தோம்.

அதே போல் ஐ.நாவினால் மும்மொழியப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தியின் 2023 வது நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நாம் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து செல்கின்றோம். மேலும் நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களால் வடக்கு தொடக்கம் தெற்கு வரையில் சுதந்திரமாக வசிப்பதற்கு ஏதுவான உரிமையை பெற்றுக்கொடுத்துள்ளோம்.

விடுதலை புலிகளின் பயங்கரவாதத்தை போன்று எவராலும் நாட்டு மக்களை அடிமைப்படுத்த முடியாத ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளோம். இவையனைத்தையும் புறம்தள்ளியே பிரிட்டன் போன்ற நாடு இத்தகையதொரு பிரேரணையை எமது நாட்டிற்கெதிராக முன்வைத்திருக்கின்றது.

இந்த நிலையில் 47 நாடுகளில் 22 நாடுகளினுடைய ஆதரவினை மாத்திரமே மனித உரிமை பேரவையினால் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது. இவற்றில் 25 நாடுகளினுடைய ஆதரவினை பெற்றுக்கொள்ள முடியாத நிலையாமையேற்பட்டது, ஏனெனில் 11 நாடுகள் அந்த யோசனைக்கு எதிராக வாக்களித்தன. ஏனைய 14 நாடுகள் தமது வாக்குகளை பிரயோகிக்காது சுயாதீனமாக இதிலிருந்து விலகிக்கொண்டன. இதனை நோக்கும் போது பெரும்பான்மையான நாடுகள் இந்த யோசனைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளமையே காணக்கூடியதாவுள்ளது" எனவும் அவர் தெரிவித்தார்.

## உள்விவகாரங்...

வாக்களிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை முன்வைத்தார்.

இலங்கை அரசு அமைதி மற்றும் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் சீனா தரப்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானும் இந்தத் தீர்மானத்தில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தது.

சீனாவைத் தொடர்ந்து பேசிய பாகிஸ்தான் பிரதிநிதி, இந்தத் தீர்மான வரைவு "சர்வதேச தீவிரவாத அமைப்பு என்று பட்டியலிடப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் குறித்து பேசுவதில் தோல்வியடைந்து விட்டது," என்று கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகளை அங்கீகரிக்கவும் இந்தத் தீர்மானம் தவறிவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனா காலத்தில் முஸ்லிம்கள் உடல்கள் புதைக்க மறுக்கப்பட்டமை குறித்தும் பின்னர் அனுமதி வழங்கப்பட்டது குறித்தும் பேசிய அவர், கொரோனாவால் இறந்த இஸ்லாமியர்கள் உடலைப் புதைக்க இலங்கை அரசு அனுமதி வழங்கியதற்கும் பாராட்டு தெரிவித்தார்.

## மண்ணெண்...

இந்த குழு 8 ஆம் திகதி கூடி மண்ணெண்ணெய் விலையை 10 வீதம் அதிகரிக்க முடிவு செய்தது. இதற்கு மீன்பிடி அமைச்சும் ஒப்புதல் அளித்துள்ளது.

தற்போது ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை 70 ரூபா. 10 வீத அதிகரிப்புக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தால், ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் விலை ரூபா 77 ஆக உயரும்.

## யாழ்ப்பாணத்தில்...

வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 600 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே, 23 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட யாழ்.நகர் 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஏற்கனவே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புடைய 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்.நகரிலுள்ள மரக்கறிச் சந்தைத் தொகுதியில் எழுமாறாக 60 பேரிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதில் 9 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் இருவரும் காரைநகர் இ.போ.ச. பேருந்து சாலை பணியாளரின் குடும்ப உறுப்பினர்கள்.

மன்னாரில் நகரைச் சேர்ந்த மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கிளிநொச்சி கண்டாவளையில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தோற்று கண்டறியப்பட்டது என்றும் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

## தமிழர்கள்...

பதிந்துள்ளார்:

"இலங்கை போர்க்குற்றங்கள் குறித்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வாக்கெடுப்பில் இலங்கைக்கு ஆதரவாக பாஜக அரசு வெளிநடப்பு செய்தது உலக தமிழர்களுக்கு பச்சைத் துரோகம்!

தமிழ்நாட்டில் தேர்தல் என்பதால் தான் வெளிநடப்பு. இல்லையென்றால் ஆதரவாகவே வாக்களித்திருக்கும்! இதனை தமிழர்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள்."

## யாழ். நகர்...

ஸ்ரீமரக்கறிகள், பழங்கள், உள்ளூர் உற்பத்திகள் மற்றும் வெற்றிலைக் கடைகள் அடங்கிய சந்தைப் பகுதி மாத்திரம் இவ்வாறு மூடப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

யாழ்.நகரிலுள்ள மரக்கறி சந்தைத் தொகுதியில் எழுமாறாக 60 பேரிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டன. இவர்களில் 9 வியாபாரிகளுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதில் 6 உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் (பனம் பொருள்கள்) வியாபாரிகளும், மூவர் மரக்கறி வியாபாரிகளும் அடங்குகின்றனர்.

இதனால் சந்தைத் தொகுதியின் அனைத்து வியாபாரிகளும் சுயதனிமைப்படுத்தப்பட்டனர் என்றும் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

# விக்கிக்கு எதிராக விசாரணை

கொழும்பு, மார்ச் 24

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக சி.ஐ.டி.யினர் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இந்த விடயம் தொடர்பாக கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் சி.ஐ.டியினர் பீ அறிக்கையை சமர்ப்பித்து இதனை அறிவித்துள்ளனர்.

கடந்த 2020 ஒகஸ்ட் மாதம், தனியார் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற விக்னேஸ்வரன் கருத்து வெளியிட்டிருந்தார்.

குறித்த கருத்துக்கள் இனங்களிடையே, நாட்டில் குழப்பத்தை தோற்றுவிக்கும் வகையில் அமைந்திருந்ததாகக் கூறி முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் பயங்கரவாத தடைச் சட்டம், சிவில் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணைக்கப்பாட்டுச் சட்டம் மற்றும் தண்டனை சட்டக் கோவைகளின் கீழ் இவ் விசாரணைகள் இடம்பெறுவதாக சி.ஐ.டி.யினர் நீதவானுக்கு அறிவித்துள்ளனர்.

# பொருள்கள் விலை அதிகரிப்பு புத்தாண்டை சந்தோசமாக கொண்டாட முடியாத நிலை

கொழும்பு,மார்ச்.24

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருள்களின் விலை அதிகரிப்பால் தமிழ், சிங்கள புத்தாண்டை சந்தோசமாக கொண்டாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மக்களுக்கு நிவாரணம் வழங்கி புத்தாண்டைக் கொண்டாட முடியுமான சூழலை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதி அமைச்சின் கீழ் இருக்கும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி(கட்டுப்பாட்டு ) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

## இலங்கைக்கு...

இந்தியா உள்ளிட்ட 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பில், சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தை இணை அனுசரணை நாடுகளின் சார்பாக பிரிட்டனின் ஜெனிவாவுக்கான பிரதிநிதி ஜூலியன் ப்ரைத்வைட் முன்வைத்தார்.

உறுப்பு நாடுகள் உரையாடலில் பங்கேற்றபோது, சீனப் பிரதிநிதி வாக்கெடுப்பை கோரினார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயின் விளைவாக பேரவையின் 47 உறுப்பு நாடுகளும் நேரில் கலந்து கொள்ள முடியாததால், சூம் மூலம் ஒன்லைனில் வாக்களித்தனர்.

டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதியாக இருந்தபோது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகிய அமெரிக்கா, நேற்றைய வாக்கெடுப்புக்கு முன்னதாக தீர்மானத்தை வாய்மொழியாக ஆதரித்தது.

தீர்மானத்தை 22 நாடுகள் அங்கீகரித்தன.

ஆர்ஜென்ரினா, ஆர்மீனியா, ஆஸ்திரியா, பஹாமஸ், பிரேசில், பல்கேரியா, செக் குடியரசு, டென்மார்க், பிஜி, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, மலாவி, மார்ஷல் தீவுகள், மெக்சிக்கோ, நெதர்லாந்து, போலந்து, தென்கொரியா, உக்ரைன், பிரிட்டன், அயர்லாந்து, உருகுவே ஆகிய 22 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

சீனா, ரஷ்யா, பங்களாதேஷ், பொலிவியா, கியூபா, எரித்திரியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சோமாலியா, உஸ்பெக்கிஸ்தான், வெனிசூலா ஆகிய 11 நாடுகள் எதிராக வாக்களித்தன.

வாக்களிப்பை 14 நாடுகள் தவிர்த்தன. அவை, இந்தியா, பஹ்ரைன், புர்கினோ பார்சோ, கமரூன், காபோன், இந்தோனேசியா, ஜப்பான், லிபியா, மவுரித்தேனியா, நமீபியா, நேபாளம், செனகல், சூடான், டோகோ ஆகியன வாக்களிக்கவில்லை.

## மாகாண சபை...

கோள் விடுத்துள்ளது.

இலங்கை குறித்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பிற்கு முன்னதாக இந்திய பிரதிநிதி கருத்து தெரிவிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

"நெருங்கிய அயல்நாடு என்ற அடிப்படையில் 2009 ம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையின் நிவாரணம், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளிற்கு இந்தியா பங்களிப்பு செய்துள்ளது. எங்கள் அபிவிருத்தி உதவிகள், வாழ்வாதாரத்தை மீள ஏற்படுத்துதல் பொருளாதார மீள் எழுச்சி குறித்து கவனம் செலுத்துபவையாக காணப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை இரண்டு அடிப்படை விடயங்களால் வழிநடத்தப்படுகின்றது. ஒன்று சமத்துவம் நீதி கௌரவம் சமாதானம் ஆகியவற்றிற்கு தமிழர்களிற்கான எங்கள் ஆதரவு. இரண்டாவது இலங்கையின் ஐக்கியம் ஸ்திர தன்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டினை உறுதி செய்வது. இரண்டு இலக்குகளும் ஒன்றுடன் ஒன்றிற்கு ஆதரவானவை. இரண்டு நோக்கங்களையும் பரஸ்பரம் நிறைவேற்றுவதிலேயே இலங்கையின் முன்னேற்றம் உறுதிப்படுத்தப்படும்.

மாகாணசபைக்கான தேர்தல்களை விரைவில் நடத்துதல் மற்றும் இலங்கையின் அரசமைப்பின் 13வது திருத்தத்திற்கு ஏற்ப அனைத்து மாகாணசபைகளும் வலுவான விதத்தில் செயற்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அதிகாரங்களை பகிர்வது குறித்த தனது அர்ப்பணிப்புகளை இலங்கை நிறை வேற்றவேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் வேண்டுகோள்களிற்கு இந்தியா ஆதரவளிக்கின்றது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பொருத்தமான தீர்மானங்களிற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என நாங்கள் கருதுகின்றோம்.

இலங்கை அரசாங்கத்தினை நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் தமிழ் மக்களின் அபிலாசைகளிற்கு தீர்வை காணுமாறும் அனைத்து பிரஜைகளினதும் அடிப்படை சுதந்திரமும் மனித உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை கொண்டிருக்குமாறும் இலங்கை அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம்" எனவும் அவர் தெரிவித்தார்.

# இதுவும் நடந்தது!

அவுஸ்திரேலியாவில் வாழும் எழுத்தாளர் நோயல் நடேசன் யாழ்ப்பாணத்தின் எழுவைதீவைச் சேர்ந்தவர்.

யுத்தம் முடிந்ததும் அவர் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் எழுவைதீவுக்கு ஆஸ்பத்திரிக்கான கட்டிடம் ஒன்றை கட்டி அரசிடம் கையளித்தார். இன்று அந்த ஆஸ்பத்திரி எழுவைதீவில் வாழும் சுமார் இரு நூறு குடும்பங்களுக்கு வைத்திய சேவை செய்கின்றது.

ஆஸ்பத்திரியை தனது மக்களுக்கு கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம்தான் இருக்கின்றதே, இந்த ஆள் எதற்குப்போய் தனது பணத்தில் கட்டிக் கொடுக்கின்றார் என்று நான் பல தடவை நினைத்ததுண்டு. அந்த ஆஸ்பத்திரியைக் கட்டிக்கொண்டிருக்கும் போது அவரிடமே ஒருதடவை கேட்டும் இருக்கின்றேன். சிரித்துக்கொண்டே பதில் சொல்லாமல் கடந்துவிட்டார்.

கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்டு அரசிடம் கையளிப்பதற்காக சிறிய விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கும் சென்றிருந்தேன்.

அங்கே அந்த விழாவில் பேசிய நடேசன்-

'வீதியில் சென்றுகொண்டிருக்கும்போது கல் ஒன்று காலில் அடித்துவிடுகின்றது. விரலில் காயம். இரத்தம் ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆனால், நாம் என்ன செய்வோம், முதலில் அந்தக் கல்லை எடுத்து ஓர் ஓரமாக எறிவோம். ஏன், நமக்குப் பின்னால் வருபவருக்கும் அடிபட்டுவிடக்கூடாது என்பதற்காக. அதுபோலத்தான் நான் இந்த தீவில் வாழ்ந்த போது, ஒருதடவை எனக்கு திடீர் சுகவீனம், எனது பெற்றோர் பதறியடித்துக்கொண்டு என்னைத் தூக்கிக்கொண்டு படகில் பல மணி நேர பயணத்தின் பின்னர் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். நான் பட்ட அந்த காயம் என் பின்னால் வருகின்றவர்களும் படக்கூடாது என்பதற்காகவே இந்த ஆஸ்பத்திரியைக் கட்டிக்கொடுத்தேன்' என்றார்.

அவர் அப்போது அதனைக் கட்டிக்கொடுத்திருக்காவிட்டால் இன்றும் எழுவைதீவு மக்கள் திடீர் சுகவீனமடையும் பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டு ஊர்காவற்றுறைக்கோ, அனலைதீவுக்கோ ஓடிக்கொண்டுதான் இருப்பார்கள்.

பசறையில் அண்மையில் நடைபெற்ற பஸ் விபத்து ஒன்றில் பதினைந்து பேர் பரிதாபகரமாக பலியானார்கள். பலர் காயமடைந்தனர்.

அந்த பஸ் எவ்வாறு விபத்துக்குள்ளானது என்பதை சி.சி.ரி.வியில் பதிவான காட்சியைப் பார்த்து முழு நாடும் பதறியது. மலையகத்தில் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படுவது ஒன்றும், இதுதான் முதல் தடவை என்றல்ல.

ஒரு வாகனம் வீதியில் சற்றுத் தடுமாறிவிட்டால் அது பல மீற்றர்கள் பள்ளத்திற்கு தடம்புரண்டுவிடும். மலையகத்திற்கு போய்வந்தவர்களுக்கு அந்த பகுதியில் வீதிகள், சில இடங்களில் வாகனத்திலிருந்து கீழே பார்த்தால் இரத்தம் உறைவது போன்ற பீதி வரும்.

மலையகத்திலுள்ள அத்தனை வீதிகளிலும் பாதுகாப்பு அரண்களை அமைப்பது சாத்தியமானதா என்பது தெரியவில்லை. அவ்வாறு செய்யமுடியுமெனில் செய்தே ஆகவேண்டும். ஆனால், அதை எல்லாவற்றையும்விட சுலபமாக செய்யக்கூடியது, வாகனங்களை ஓட்டுகின்ற சாரதிகள் ஒவ்வொருவரும் தத்தமது கடமையை சரியாகச் செய்தால் இதுபோன்ற விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

அந்த விபத்து நடைபெற்று முடிந்ததும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, விபத்து நடைபெற்ற அந்த பகுதியில் தடுப்பு அரண்களை கட்டியதை சமூக வலைத்தளங்களில் பலரும் வறுத்தெடுத்தனர்.

வீதி அதிகார சபை, அந்த இடத்தில் முன்கூட்டியே தடுப்பை போட்டிருக்கலாம் என்பதே அந்த வலைஞர்களின் வாதமாக இருந்தது.

உண்மைதான், ஆனால், தடுப்பு கட்டுவதென்பது வாகனச் சாரதிகளுக்கு ஒரு முன்னெச்சரிக்கையை ஏற்படுத்துமே தவிர, அந்த தடுப்பையும் பிடுங்கிக் கொண்டு பஸ் பாயாது என்பதற்காக அல்ல.

இதுபோன்ற தடுப்புக்கள் ஒரு முன்னெச்சரிக்கை மட்டும்தான். ஊர்க்குருவி, நடேசனின் கல் அடிபட்டகதையை ஞாபகப்படுத்தியது, விபத்து நடந்த பின்னராவது வீதி அபிவிருத்தி அதிகாரசபை செய்தது ஒரு நல்ல காரியம்தான் என்பதை அங்கே சுட்டுவதற்கே.

நமக்கு அடித்த கல்லை தூக்கி ஓரமாகப் போடுகின்ற வேலையைத்தான் விபத்து நடந்த பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செய்திருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டவே!

தடுப்பு முன்னர் போட்டாலும், போடாமலே விட்டாலும் சாரதிகள் வீதியில் கல் இருக்கின்றதா என்று பார்த்து நடந்தால் அதில் அடிபடுவதை தவிர்க்கலாம்!

- ஊர்க்குருவி.

# "ஐ.நா தீர்மானம் இலங்கைக்கு தோல்வி ஆனால் தமிழர்களுக்கான நீதியல்ல"

ஜெனிவா, மார்ச் 24

**அனைத்துலக அரங்கில் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வியாக, ஐ.நா மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அமைந்துள்ளதென தெரிவித்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், இந்த தோல்வி தமிழர்களுக்கு நீதியாக மாறவில்லை என்பதோடு பொறுப்புக்கூறலை இங்கை அரசிடமே கொடுக்கின்ற ஒரு வலுவற்ற தீர்மானம் எனவும் தெரிவித்துள்ளது.**

ஐ.நா. மனித உரிமைச் சபையில் பிரித்தானியா தலைமையிலான கூட்டு நாடுகளால் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பிலான தீர்மானத்துக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்திருந்தன. வாக்கெடுப்பில் 14 பங்கேற்கவில்லை.

அண்மைக்காலத்தில் அனைத்துலக அரங்கொன்றில் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வியாக இது இருந்தாலும், முன்னைய தீர்மானங்களை விட, வலுவற்ற நீர்த்துப்போன ஓர் தீர்மானமாக இது உள்ளதெனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் இலங்கை சாமார்த்தியமாக 'பயங்கரவாதத்தின் மீதான போர்' என்று பூச்சாண்டி காட்டி உத்திகளைக் கையாண்டது. 2015ல் ஏமாற்று அரசியலைக் கையாண்டு ஐ.நா. மனித உரிமை சபையின் 30-1 தீர்மானத்தைப் பிற நாடுகளுடன் கூட்டாக முன்மொழிந்து விட்டு, அதனைச் செயலாக்காமல் அனைத்துலக சமூகத்தினை சமாளித்ததென நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே தங்களிடம் சான்று இருப்பதாக ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் துணை ஆணையாளர் மெர் கான் வில்லியம்ஸ் கூறியுள்ள போதிலும், புதிய தீர்மானத்தில் ஒரு கூறு 'ஐ.நா. ஆணையாளர் அலுவலகம் தகவலும் சான்றும் திரட்டவும் ஒருங்கமைக்கவும் பகுத்து ஆராயவும் பாதுகாக்கவும் வேண்டும்' என்று கேட்டுக் கொள்வதாக உள்ளது. இது பாதிக்கப்பட்ட தமிழர்களை ஆற்றுப்படுத்துவதற்காக சேர்க்கப்பட்ட வெற்றுக்கூடான உள்ளடக்கமாக இது தோன்றுகிறது எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# உள்நாட்டு போர் தொடர்பில் பேசுவதற்கு மனித உரிமை பேரவைக்கு தகுதியில்லை!

## எஸ்.பி.திஸநாயக்க சீற்றம்



கொழும்பு, மார்ச் 24.

"வடக்கு போர் என்பது இரு நாடுகளுக்கு இடையிலான போர் அல்ல. சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மாத்திரமே இதில் தொடர்புபடுகின்றன. உள்நாட்டு போர் குறித்து பேச ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு தகுதியில்லை. எமது நியமனங்கள் குறித்து கூறுவதற்கு அந்தப் பேரவைக்கு உரிமை கிடையாது."

இவ்வாறு காட்டமாகக் கூறியிருக்கின்றார் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க. சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் பேசிய போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"ஜேர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகள் நேட்டோவில் உள்ளன. உலகில் அரேபிய எழுச்சியில் லிபியா, ஈராக், ஆப்கான், சிரியா, யேமன் ஆகிய நாடுகளை அழிப்பதற்கான செயன்முறையில் தொடர்புபட்டுள்ளனவாகும். சவுதி அரேபியா இன்று பாவிக்கின்ற பல குண்டுகள், ஆயுதங்கள் ஜேர்மனியினுடையது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் யேமனில் அப்பாவி குடும்பமொன்று படுகொலை செய்யப்பட்டபோது சம்பவம் இடம்பெற்ற பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட குண்டுகளின் துகள்கள் ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தவை.

மிகப்பெரிய போர்க்குற்றத்தில் ஈடுபடுகின்ற தரப்பே எமக்கெதிராக தீர்மானத்தை முன்வைத்துள்ளன. இது சட்டவிரோதமாகும். வடக்கு போர் என்பது இருநாடுகளுக்கு இடையிலான போர் அல்ல. சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மாத்திரமே இதில் தொடர்புபடுகின்றன. உள்நாட்டு போர் குறித்து பேச ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு பேசத் தகுதியில்லை. எமது நியமனங் கள் குறித்தும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையும் கூறுவதற்கு அந்தப் பேரவைக்கு உரிமை கிடையாது.

எமது அரசியலமைப்பு, 13ஆவது திருத்தம் பற்றியும் பேசுகிறது. அது மனித உரிமைப் பேரவைக்கு பேசக்கூடாத விடயங்களாகும். அவர்கள் செய்கின்ற விடயங்கள் தவறு. சட்டவிரோதமானது. எமக்கெதிரான அனைத்து குற்றச்சாட்டுக்களும் பிழை. காணாமலாக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர், தாய்மாருக்கும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய் என்பது தெரியும். பல சம்பவங்கள் இறுதிக்கட்டத்தில் அப்பாவி மக்களும், போராளிகளும் பிரபாகரனின் துப்பாக்கிப் பிரயோகத்தை எதிர்கொண்டனர். பிரபாகரனின் படையினரால்தான் சுடப்பட்டார்கள். துப்பாக்கிச்சூடு நடத்திய குழுவில் பிரபாகரனின் பிள்ளைகளும் இருந்தனர்" எனவும் அவர் தெரிவித்தார்.

# 81 நாட்களில் இடம்பெற்ற விபத்துகளில் 508 பேர் பலி!

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் கடந்த 81 நாட்களில் மட்டும் வாகன விபத்துக்களால் 508 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இடம்பெற்ற 483 விபத்துக்களில் சிக்கியே இவர்கள் மரணித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், இந்தக் காலப்பகுதியில் ஆயிரத்து 54 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 2 ஆயிரத்து 488 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் வாகன விபத்துக்களால் ஆயிரத்து 284 சொத் துக்களும் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கல்வி tv CHANNEL-1

காலை

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

பகல்

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu
24.03.2021 புதன்கிழமை
சார்வரி, பங்குனி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# அரசாங்கத்தின் முதலாது தோல்வி பதிவானது

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான விவாதங்கள் முடிவுக்குவந்திருக்கின்றன. இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பான புதிய பிரேரணை, 22 ஆதரவான வாக்குகளுடன் நிறைவேறியிருக்கின்றது. இலங்கைக்கு ஆதரவாக 11 வாக்குகள் மட்டுமே கிடைக்கப் பெற்றிருக்கின்றன. கடந்த ஒரு மாத காலமாக, மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைய தோற்கடிக்கும் நோக்கில் அரசாங்கம் பல்வேறு இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டிருந்தது. இறுதியில், 11 நாடுகளின் ஆதரவுடன் தோல்வியடைந்திருக்கின்றது.

இலங்கைக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் நாடுகளும் கொழும்பின் இராஜதந்திர நகர்வுகளினால் ஆதரவளித்தவை என்றும் கூறிவிடமுடியாது. சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும் கியூபா போன்ற சில தென்னமெரிக்க நாடுகள் அனைத்துமே, மேற்குலகின் மனித உரிமைகள் சார்ந்த நிலைப்பாடுகளை எதிர்க்கும் நாடுகள். அதேவேளை, சீனா மிகவும் வெளிப்படையாகவே இலங்கையை ஆதரிக்கும் நாடு. எனவே, சீனாவின் ஆதரவிற்கு கொழும்பின் இராஜதந்திரம் தேவையற்ற ஒன்று. இந்த பின்புலத்தில் நோக்கினால், கொழும்பின் இராஜதந்திர நகர்வுகளினால் வெற்றிகொள்ளப்பட்ட நாடு என எதனையுமே கூறமுடியாது. சில தென்னமெரிக்க நாடுகளை பொறுத்தவரையில், மேற்குலக நாடுகள் எதனை முன்வைத்தாலும் அவற்றை அவர்கள் எதிர்ப்பார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்புலத்தில், பொதுஜன பெரமுன அரசாங்கம் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்திருக்கும் பின்புலத்தில், முதலாவது இராஜதந்திர தோல்வியை அரசாங்கம் எதிர்கொண்டிருக்கின்றது. குறிப்பாக, இந்தியாவின் ஆதரவு தமக்கிருப்பதாக அரசாங்க தரப்பினர் தொடர்ச்சியாக கூறிவந்தனர். ஆனால், எதிர்பார்த்தது போன்றே, இந்தியா வாக்கெடுப்பை தவிர்த்திருக்கின்றது. இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பில், ஏற்கனவே 'ஈழநாடு' தெளிவாக பதிவு செய்திருந்தது. இந்தியாவிற்குள்ள சில நெருக்கடிகள் காரணமாக, இந்தியாவினால் ஆதரவளிக்க முடியாவிட்டாலும்கூட, நிச்சயமாக, எதிர்த்து வாக்களிப்பதற்கான வாய்பில்லை என்பதை நாம் கணித்திருந்தோம். அதேவேளை, பேரவையின் வாக்கெடுப்பின்போது, இலங்கை தொடர்பில் பேசிய இந்திய பிரதிநிதி தெரிவித்திருக்கும் கருத்துக்களும் கொழும்பின் இராஜதந்திர தோல்வியையே காண்பிக்கின்றது.

தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் கௌரவாக நடத்தப்படவேண்டுமென்று வலியுறுத்திருக்கும் இந்தியா, 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவேண்டும். அத்துடன், மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்தாது நடத்த வேண்டுமென்னும் கோரிக்கைகளை மீளவும் வலியுறுத்தியிருக்கின்றது. இதுவும் கொழும்பை பொறுத்தவரையில் இராஜதந்திர தோல்விதான். ஏனெனில், அண்மைக்காலமாக புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டுவருவதன் ஊடாக, 13ஆவது திருத்தத்தை இல்லாமலாக்க முடியுமென்னும் குரல்களே தென்பகுதியிலிருந்து எழுந்தன. இந்த நிலையில் இந்தியாவின் வலியுறுத்தல் கொழும்பிற்கு ஒரு தெளிவான செய்தியை வழங்கியிருக்கின்றது.

உலகத்தை சண்டித்தனத்தால் எதிர்கொள்ள முடியுமென்னும் ராஜபக்ஷக்களின் அணுகுமுறை மீளவும் அவர்களுக்கான தோல்வியை காண்பித்திருக்கின்றது. இது ஆரம்பம் மட்டுமே. இந்த இராஜதந்திர தோல்விகள் தொடரும். மேற்குலக தாராளவாத உலக ஒழுங்குடன் அரசாங்கம் ஒத்துப்போக மறுத்தால், இந்த நிலைமை தொடரும். அதேவேளை, இலங்கை விவகாரத்தை மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியில் எடுக்க வேண்டுமென்று கூறிவந்த, தமிழர் தரப்புக்களும் தோல்வியடைந்திருக்கின்றன. அரசாங்கத்தின் இலக்கும் அதுவாகவே இருந்தது.

# வவுனியாக் குளத்தைப் பாதுகாக்க சத்தியாக்கிரக போராட்டம்!

## சுற்றுலா தலம் என்ற போர்வையில் அழிக்கப்படும் குளம்!!



*வவுனியாக்குளத்தினை பாதுகாக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாபெரும் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை முன்னெடுக் கவுள்ளதாக வவுனியா குளத்திற்கான மக்கள் செயலணி தெரிவித்துள்ளது.*

*குறித்த விடயம் தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை அவர்கள் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,*

*வவுனியா மாவட்டமானது தனிச்சிறப்பம்சமாக நூற்றுக் கணக்கான குளங்களைத் தன்ன கத்தே கொண்டமைந்த ஒரு பிர தேசமாகும். இங்கு குடிநீர்த்தேவைக்கான நிலத்தடி நீருக்கும் விவசாய நீர்ப்பாசனத் திற்கும் கால்நடை வளர்ப்பிற்கும் குளங்களே ஆதா ரமாக உள்ளன.*

*இந்நிலையில் வவுனியாவிலுள்ள பல குளங்களும் விவசாய நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு எங்கள் கண்முன்னேயே இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன. பெயரில் மாத்திரமே பல குளங்கள் இருக்கின்ற நிலையில் வவுனியா எனப்பெயர்வரக் காரணமான வவுனியன் விளாங்குளம் (வவுனியாக்குளம்) பலவழிகளாலும் கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் செய்யப்படுவது பாரிய ஆபத்தாக உருவெடுத்துள்ளது.*

*வவுனியாக்குளம் மண்கொட்டி அழிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்குடன் 20க்கும் மேற்பட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிணைவில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் "வவுனியாக் குளத்திற்கான மக்கள் செயலணி" தோற்றம் பெற்றிருந்தது.*

*குளத்தின் 2000 சதுர மீற்றர் நீரேந்து பகுதி மண்கொட்டி நிரவப்பட்டு "சுற்றுலா மையம்" என்ற பெயரிலான ஒரு வியாபாரஸ் தலமாக மாற்றப்படுவது தொடர்பில் பொது விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு சுவரொட்டி இயக்கத்தையும் துண்டுப் பிரசுர இயக்கத்தையும் நடாத்தியிருந்தோம்.*

*தற்போது சிறிய அளவில் ஆரம்பிக்கப் பட்டுள்ள சுற்றுலா மையம் வியாபாரநோக்கில் தொடர்ந்து விஸ்தரிக்கப்படுமாயின் குளத்தின் நீரேந்து பகுதி மென்மேலும் குறைவடைந்து செல்லும் அபாயமுள்ளதையும், சுற்றுலா மையத்தின் குத்தகைதாரர் நகரசபையுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறிக் கட்டடங்களை அமைத்துள்ளதையும் சுட்டிக்காட்டியே வந்திருந்தோம்.*

*இதனால் குளத்தில் போடப்பட்ட மண் முற்றாக அகற்றப்பட்டு குளத்தின் நீரேந்து பகுதி பழையநிலைக்குக்கொண்டுவரப்படவேண்டுமென்பதையும் நீர்ப்பரப்பிற்குப் பாதிப்பின்றியமுறையில் மிதக்கக்கூடிய பொறிமுறைகளால் பூங்காவை அமைக்கலாம் என்றும் எமது கோரிக்கைகளில் வெளிப்படுத்தியிருந்தோம்.*


*நாங்கள் எதிர்வு கூறியது போன்றே துரதிஷ்டவசமாக மக்கள் எதிர்ப்பை மீறியும் பொழுதுபோக்கு என்ற போர்வையில் குள ஆக்கிரமிப்பு விஸ்தரிக்கப்பட்டுக்கொண்டே சென்றது. நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் நகரசபையின் எதிர்ப்பையும் மீறி மற்றோர் 2000 சதுரமீற்றரிலும் அதிகமான நீரேந்து பகுதி மண்ணிட்டு நிரப்பப்பட்டு சிற்றுண்டிச் சாலை அமைக்கப்பட்டுள்ளதுடன் அதை உடைக்குமாறு நகரசபையால் அனுப்பப் பட்ட உத்தரவும் தொடர்ந்து மீறப்பட்டே வந்துள்ளது.*

*எனவே இதனை படிப்பினையாகக் கொண்டு சுற்றுலாமையம் என்ற பெயரில் குளத்தில் கொட்டப்பட்ட மண் முற்றாக அகற்றப்பட்டு நீரேந்து பகுதி பழையநிலைக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பது எமது உடனடி கோரிக்கையாக உள்ளது. எழுத்து மூலமும் நேரிலும் இக்கோரிக்கைகள் அரச அதிகாரிகளிடமும் மக்கள் பிரதிநிதிகளிடமும் பலமுறை வழங்கப்பட்டும் சரியான நடவடிக்கைகள் இன்மையால் பொது மக்கள் போராட்டம் ஒன்றிற்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.*

*இது தொடர்பாக பல்வேறு சமூகம் சார்பான அமைப்புகள் சந்தித்துக் கலந்துரையாடியதன் அடிப்படையில் 26.03.2021 காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பண்டார வன்னியன் சிலை முன்றலில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் ஒன்றினைச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம். நிலத்தடி நீரையும் விவசாயத்திற்கான நீர்ப்பாசனத்தையும் பாதுகாத்து எமது அடுத்த தலைமுறைக்குக் கொடுப்பதன் முதற்படியாக இன்று அனைவரும் வவுனியாக் குளத்தினைப் பாதுகாக்க ஒன்றிணைவோம்.*

*அனைத்து பொது அமைப்புக்களும் மக்களும் இன மத கட்சி பேதமின்றிக் கலந்துகொண்டு எமது நீர் இருப்பைப் பாதுகாத்துக்கொள்வோம் என்று குறித்த அறிக்கையில் உள்ளது.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு






**மேடம்**

தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கவர்ச்சி அம்சம் காரணமாக உங்களின் முக்கியத்துவம் கூடும். பணியாளர்களுக்கு பதவி, சம்பள உயர்வு உண்டு.

**இடபம்**

சிலருக்கு வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை அமையும். உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார். பிள்ளைகளால் ஏற்பட்டிருந்த கலக்கம் தீர ஆரம்பிக்கும்.

**மிதுனம்**

முன்பிருந்ததைக் காட்டிலும் நிதி நிலை பலப்படும். வீடு, மனைகளினால் ஆதாயம் ஏற்படும். லாபமான நாள். பெண்களுக்கு இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கும்.

**கடகம்**

மனம் மகிழும். நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். நண்பர்களை சந்திப்பீர்கள். உங்கள் திறமை கவனிக்கப்படும். சிலர் உயர்கல்விக்காக வெளிநாடு செல்ல வாய்ப்பு வரும்.

**சிம்மம்**

சிலருக்கு நல்ல வரன் அமைந்து திருமணம் நிச்சயமாகும். மனதில் சிறு சிறு குறைகள் இருப்பதைத் தவிர்க்க முடியாது. பெண்களுக்கு நற்செய்தி உண்டு. கடன் வாங்க வேண்டாம்.

**கன்னி**

பொறுப்புடன் பணியாற்றுவீர்கள். குடும்பம் மகிழும். குடும்ப விவகாரங்களுக்காக அலைய வேண்டியிருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருப்பீர்கள்.

**துலாம்**

நெருங்கிய சிலர் உங்களிடம் மனம் விட்டுப் பேசுவார்கள். உழைப்பு எதுவும் வீணாகாது. பயணங்களால் லாபம் உண்டு. பெருந்தன்மையும், சகிப்புத்தன்மையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்**

உழைப்பால் உயர்வீர்கள். முன்பிருந்த சிரமங்கள் குறையும். பெரும்பொறுப்பை நீங்களே நிறைவேற்ற வேண்டியிருக்கும். பணவரவு கூடும். யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**தனுசு**

எல்லா இடங்களிலும் முக்கியத்துவம் எதிர்பார்க்காதீர்கள். பணியிடத்தில் இருந்து வந்த பிரச்னைகள் குறையும். உடனிருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

**மகரம்**

உடல் ஆரோக்கியத்தில் இருந்த பாதிப்புகள் மறையும். பொருளாதாரம் சிறப்பாக இருப்பதால் மனம் நிறையும். அக்கம் பக்கத்தினரின் செயல்பாடுகளால் எரிச்சல் வரலாம்.

**கும்பம்**

சிறு ஏமாற்றம் வந்தாலும் சமாளித்து நிமிர்ந்து விடுவீர்கள். குடும்பத் தேவைகளை சுலபமாக நிறைவு செய்ய முடியும். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாமே.

**மீனம்**

எதிர்பாராத உதவி கிடைப்பதால் கடன் சற்று குறையும். குடும்பத்தில் சிறு சிறு வாக்கு வாதங்கள் ஏற்படும்.பெருந்தன்மையான நட்பு வரும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும்.

# அ.தி.மு.கவின் அமைப்பை ஏற்றுக்கொண்டால் சசிகலாவை ஏற்பது குறித்து பரிசீலிக்கத் தயார்!

## ஓ.பன்னீர்செல்வம் தெரிவிப்பு



சென்னை, மார்ச் 24

அதிமுகவின் அமைப்பை ஏற்றுக்கொண்டால் சசிகலாவை ஏற்றுக்கொள்வது குறித்து பரிசீலிக்கலாம் என, தமிழக துணை முதல்வரும் அதிமுக ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சிக்கு அவர் நேற்று பேட்டியளித்தார். அப்போது, அவர் இது தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்தார்.

கழக ஆட்சி அமைய அரசியலில் இருந்து ஒதுங்குவதாக சசிகலா தெரிவித்துள்ளாரே?

கழக ஆட்சி என்றால் அ.தி.மு.க. ஆட்சிதான். அதை நினைத்து அவர் சொல்லியிருந்தால் அவருக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையில் வரவேற்கிறேன். அதனை அவரது பெருந்தன்மையாகத்தான் நான் பார்க்கிறேன்.

அவர் மீது எனக்கு எந்த வருத்தமும் இல்லை. முதலில் இருந்தே அவர் மீது வருத்தங்கள் இல்லை. ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் சில சந்தேகங்கள் பொதுவெளியில் அவர் மீது இருந்தன. சில பிரச்சினைகளில் அவருக்கு அவப்பெயர் உருவாகக்கூடிய சூழல் இருந்தது. அதனால் ஜெயலலிதா மரணம் குறித்து நீதி விசாரணை வைத்து நிரபராதி என நிருபித்தால் அவர் மீதிருந்த அவப்பெயர் விடுபடும் என்றுதான் சொன்னேன்.

அவர் மீது எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த சந்தேகமும் இல்லை. நான் சசிகலாவுடன் இருந்திருக்கிறேன். 32 ஆண்டு காலம் அவர் ஜெயலலிதாவுடன் இருந்திருக்கிறார். ஜெயலலிதாவுக்கு வேண்டிய உதவிகளை செய்தார் என்கிற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரிக்கும் ஆணையம் 6 முறை என்னை விசாரணைக்கு அழைத்தார்கள். நான்கு முறை அவர்களாகவே திகதி மாற்றிக் கொண்டார்கள். அப்போது, நான் தயாராகத்தான் இருந்தேன்.

இரு முறை என்னால் வர இயலவில்லை என தெரிவிக்கப்பட்டது. தற்போது, அப்பலோ நிர்வாகம் விசாரணைக்கு தடை பெற்றுள்ளது. மீண்டும் விசாரணை நடைபெறும்போது நான் உண்மையை சொல்வேன்.

சசிகலா மீண்டும் அரசியலுக்கு வந்தால் அவருக்கு அ.தி.மு.கவில் இடம் இருக்கிறதா?

அவர்தான் இப்போது அரசியலை விட்டு ஒதுங்கிவிட்டாரே. சிக்கலான கேள்வியை கேட்கிறீர்களே. அதற்கு வாய்ப்பே இல்லை என முதல்வர் கூறியிருக்கிறார். அவர் 4 ஆண்டு காலம் சிறைத்தண்டனை அனுபவித்திருக்கிறார்.

ஜனநாயக முறையில் அதிமுக இயங்குகிறது. தனிப்பட்டவருக்காகவோ, குடும்பத்திற்காகவோ இயங்கவில்லை. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் கட்சி இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அமைப்பை அவர் ஏற்றுக் கொண்டால் அவரை ஏற்றுக் கொள்வதை பரிசீலிக்கலாம்- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தி.மு.க. கூட்டணிக்கு எதிராக வேட்புமனு: விடுதலைச் சிறுத்தைகள் நிர்வாகி நீக்கம்!

### திருமாவளவன் அறிவிப்பு



சென்னை, மார்ச் 24

தி.மு.க கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி போட்டியிடும் 6 தொகுதிகளை மீறி சுயேச்சையாகப் போட்டியிடும் மண்டல அமைப்புச் செயலாளரைக் கட்சியை விட்டு நீக்குவதாக விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் அறிவித்துள்ளார்.

திமுக கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி காட்டுமன்னார்கோயில், செய்யூர், நாகப்பட்டினம், வானூர், அரக்கோணம், திருப்போரூர் ஆகிய 6 தொகுதிகளில் தனிச் சின்னத்தில் போட்டியிடுகிறது.

இதுதவிர மற்ற இடங்களில் திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகள் போட்டியிடும் இடங்களை ஆதரிக்கவேண்டும் என்பது முடிவு. இதை மீறி தி.மு.க. கூட்டணி போட்டியிடும் திட்டக்குடி தொகுதியில் சுயேச்சையாக கட்சி முடிவை மீறிப் போட்டியிட்டதால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தேர்தல் களத்தில் சுந்தர்.சி!

### குஷ்புவுக்கு வாக்குகள் சேகரித்தார்

சென்னை, மார்ச் 24

முதல் முறையாகத் தேர்தல் களத்தில் சுந்தர்.சியைக் காண முடிந்தது. மனைவி குஷ்புவுக்காக வாக்குகள் சேகரித்தார்.

தமிழ்த் திரையுலகின் முன்னணி இயக்குநராக வலம் வருபவர் சுந்தர்.சி. தற்போது ஆர்யா, ஆண்ட்ரியா, ராஷி கண்ணா உள்ளிட்ட பலர் நடித்துள்ள ‘அரண்மனை 3’ படத்தை இயக்கியுள்ளார். இதன் இறுதிக்கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

எப்போது பத்திரிகையாளர்களைச் சந்தித்தாலும், அரசியல் குறித்த கேள்விகளைத் தவிர்த்துவிடுவார் சுந்தர்.சி. குஷ்புவின் அரசியல் வருகை, குஷ்புவை மையப்படுத்தி அரசியல் கேள்விகள் என என்ன கேட்டாலும், ‘அதை நீங்கள் அவரிடமே கேட்டுக் கொள்ளுங்கள். அவருடைய அரசியல் களத்துக்குள் நான் தலையிடுவதில்லை” என்று கூறிவிடுவார் சுந்தர்.சி.

தற்போது முதல் முறையாகச் சட்டப்பேரவைத் தேர்தலில் களம் காண்கிறார் குஷ்பு. ஆயிரம் விளக்கு தொகுதியில் பா.ஜ.க சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். மனைவி முதல் முறையாக வேட்பாளராகி இருப்பதால், அவருக்காக வாக்குகள் சேகரித்தார் சுந்தர்.சி. இது திரையுலகினர் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுந்தர்.சியுடன் நடிகர் விச்சு உள்ளிட்ட சிலரும் ஆயிரம் விளக்கு தொகுதியில் குஷ்புவுக்கு வாக்கு சேகரித்துள்ளனர். அங்குள்ள மக்கள் இயக்குநர் சுந்தர்.சி என்றவுடன் அவருடன் புகைப்படத்துடன் எடுத்துக் கொண்டனர். சுந்தர்.சி வாக்கு சேகரிக்கும் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.




# காடுகள் அழிப்புக்கு எதிராக முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 24

நாடளாவிய ரீதியில் இடம்பெறும் காடழிப்புக்கெதிரான போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக முல்லைத்தீவில் மூன்று கோரிக்கைகளுடன் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் காடழிப்பு நடவடிக்கைகளை நிறுத்தி எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பாரிய அழிவுகளை தடுக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் நேற்று முற்பகல் 10 முப்பது மணிக்கு குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்ட நிலையில் அதிகளவு வனப்பிரதேசத்தை கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு வகையிலும் இடம்பெறும் காடழிப்புக்களை நிறுத்தக்கோரி முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி வளாகத்துக்கு முன்பாக நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காடழிப்பால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான சித்திரங்கள் வரையப்பட்ட பதாதைகளை தங்கியவாறும் சுற்றுச்சூழல் அழிவுக்கு எதிராக குரல் கொடுக்கும் இளைஞர் யுவதிகளுக்கு எதிரான துன்புறுத்தல்களை நிறுத்து, வனப்பகுதிகள் அழிக்கப்படுவதை முடிவுக்கு கொண்டுவாருங்கள், நீங்கள் இல்லையென்றால் யார் -இப்போது இல்லையென்றால் எப்போது, வன அழிப்பை தடுப்போம் உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# ஆட்சி மாற்றத்தினால் பேராபத்தில் இலங்கை!

## சந்திரிகா குற்றச்சாட்டு



**கொழும்பு, மார்ச் 24**

**சர்வதேச மட்டத்தில் இலங்கை இன்று பேராபத்தை எதிர்கொண்டுள்ளது. இதற்கு இங்கு ஏற்பட்ட ஆட்சி மாற்றமே பிரதான காரணமாகும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நல்லாட்சி அரசு நூறு வீதம் திறன் என்று சொல்ல வரவில்லை. ஆனால், அந்த ஆட்சியில் சர்வதேசத் தலையீடுகள் இருக்கவில்லை. சர்வதேசத்துடன் இணைந்து நாடு பயணித்தது.

ஆனால், இந்த ஆட்சியில் சர்வதேசத் தலையீடுகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. ராஜபக்ஷ அரசின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளே இதற்குக் காரணமாகும்.

நாட்டிலுள்ள மூவின மக்களையும் அரவணைத்துக் கொண்டு பயணிக்க வேண்டிய அரசு, தமிழ், முஸ்லிம் மக்களை வேண்டுமென்றே புறந்தள்ளி வைத்துள்ளது. அவர்களின் மத, கலாசார உரிமைகளில் கைவைத்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள்தான் இலங்கை மீதான சர்வதேசத்தின் தலையீடுகளை அதிகரிக்கச் செய்துள்ளன - என்றார்.

# முல்லைத்தீவில் வளிமண்டலவியல் திணைக்கள வளாகம் திறந்துவைப்பு

முல்லைத்தீவு, மார்ச் 24

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வளிமண்டலவியல் திணைக்கள வளாகம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை, 31 வருடங்களுக்குப் பின் முல்லைத்தீவில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலக திட்டமிடல் கிளையின் ஒருங்கமைப்பில் நேற்று காலை 9.40 மணிக்கு மாவட்ட செயலகத்தின் புதிய மாநாட்டு மண்டபத்தில் உலக வளிமண்டலவியல் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க, வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் கே.டி.சுஜீவ மற்றும் அதிகாரிகள், மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மகாவித்தியாலய உயர்தர புவியியல் பாட மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் என பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர்.

(அ)

# வவுனியா நகரப் பகுதியில் கண்காணிப்பு கமெராக்கள்

வவுனியா, மார்ச் 24

வவுனியா நகரில் இடம்பெற்றுவரும் குற்ற செயல்களைத் தடுப்பதற்கு நகரின் முக்கிய சந்திகளில் கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

முதற்கட்டமாக நகரில் காணப்படும் முக்கிய சந்திகளில் கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தும் நடவடிக்கை வவுனியா வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்களின் பங்களிப்பில் இடம்பெற்று வருகின்றது.

# “எனது பணியை சதுர தொடருவார்”

## கூறுகின்றார் ராஜித



கொழும்பு, மார்ச் 24

நான் இல்லாத நேரத்தில் எனது பணியை சதுர தொடருவாரென முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன ஆகியோர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் முன்னிலையாகி, நேற்று முன் தினம் திங்கட்கிழமை வாக்குமூலம் அளித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் இருந்து வெளியேறியதன் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பாக கருத்து தெரிவிக்கவும் அவர் மறுப்பு தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சுஜீவ கமகே, (வயது-62) குழுவொன்றினால் கடத்தப்பட்டு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பிலேயே இரு வர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஹொங்கொங்கிற்கு ஏற்றுமதி செய்ய முற்பட்ட சுறா துடுப்புக்கள் சுங்க அதிகாரிகளால் மீட்பு!



கொழும்பு, மார்ச் 24

சட்டவிரோதமான முறையில் ஹொங்கொங் கிற்கு ஏற்றுமதி செய்ய கொழும்பு துறைமுகத்தின் சுங்க ஏற்றுமதிப் பிரிவுக்கு கொண்டுவரப்பட்ட பெருந்தொகை சுறா மீன் துடுப்புக்கள் சுங்கப் பிரிவு அதிகாரிகளால் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட உலர்ந்த சுறா துடுப்புக்களின் மொத்த நிறை 250 கிலோ கிராம் என்பதுடன் அவற்றின் பெறுமதி 20 இலட்சம் ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சுறாக்களின் துடுப்புக்களின் பங்கினை பெறுவதற்கு 300 இற்கும் மேற்பட்ட சுறா மீன் கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் சுங்க அதிகாரிகள் மதிப்பிட்டுக் கூறியுள்ளனர்.

இலங்கையின் மீன் வள மற்றும் நீர்வளச் சட்டத்தின் கீழ், 15.06.2017 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு 2023 - 15 இன் பிரகாரம், இந்த மீன் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதி உரிமங் களை முன்கூட்டியே பெற வேண்டும்.

ஒரு கிலோ சுறா துடுப்புக்கள் 400 அமெரிக்க டொலரையும் விட அதிக விலைக்கு விற்கப்படு வதுடன், சீனர்கள் இந்த சுறா துடுப்புக்களை ஆடம்பர உணவை தயாரிக்கப் பயன்படுத்துகின்றனர்.

ஏற்றுமதிக்காக சுறா துடுப்புக்களின் பங்கை கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டுவந்த நீர்கொழும்பைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவனத்தின் பணிப்பாளரிடம் இது தொடர்பில் அறிக்கை பதிவிடவும் சுங்கப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இலங்கை சுங்க பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய பாரம்பரிய பாதுகாப்புப் பிரிவின் அதி காரிகள் சுங்கப் பணிப்பாளர் ஜெனரல், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் விஜிதா ரவிப்ரியாவின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# ஒரு நாள் மின்வெட்டால் ரூ .1,471 மில்லியன் இழப்பு

கொழும்பு, மார்ச் 24

கடந்த ஆண்டு நாட்டில் பதிவான ஒன்பது மணி நேர மின்வெட்டு காரணமாக ரூபா 1,471 மில்லியன் இழப்பை சந்தித்ததாக மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், கடந்த வருடம் ஒகஸ்ட் 17 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட 9 மணித்தியால மின்வெட்டு காரணமாக 10.8 மில்லியன் யூனிட் மின்சாரம் நுகர்வுக்காக வெளியிடப்படவில்லை என்றார்.

நுகர்வோருக்கு உற்பத்தி செய்யப்படாத அல்லது வெளியிடப்படாத ஒவ்வொரு யூனிட் மின்சக்திக்கும் நாடு சுமார் ரூபா 136 இழப்பை சந்திக்கிறது என்றார்.

# மாகாணத் தேர்தலுக்கு உடனே தயாராகுங்கள்!

## ஐ.தே.க. கோரிக்கை



கொழும்பு, மார்ச் 24

**தேர்தல் மாவட்டம் மற்றும் தொகுதி வாரியாக ஒவ்வொரு கிராமங்களிலும் கட்சிக் கிளைகளை புனரமைக்க உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட அமைப்பாளர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இருந்து அனைத்து மாவட்ட அமைப்பாளர்களுக்கும் மின் அஞ்சல் ஊடாகவும் தொலைபேசி வாயிலாகவும் மேற்படி பணிப்புரை ருவான் விஜேவர்தனவால் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான அவசர கடிதங்களும் தொகுதி அமைப்பாளர்களுக்கு கட்சித் தலைமையகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று சிறிகொத்தா வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஜூன் மாத பகுதியில் நாடளாவிய ரீதியில் ஒரே சமயத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில், கட்சிக் கிளைகளின் புனரமைப்புப் பணிகளை விரைவில் பூர்த்தி செய்யுமாறும் மாகாண சபைத் தேர்தலுக்கு தயாராகுமாறும் பொருத்தமான வேட்பாளர்களை தயார் படுத்துமாறும் ஐக்கிய தேசிய கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலைகளில் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வகிபாகம் குறித்து தற்போது பெரிதாக மக்களால் சிந்திக்கப்பட்டு வருவதாகவும் ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தல் ஊடாக பாராளுமன்றத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதிகள் எவரும் பிரவேசிக்கமுடியாத நிலையில், தற்போது அதன் பாரதூரத் தன்மையையும் அவசியத்தையும் அனைவரும் உணர்ந்துள்ளதாகவும் ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் வேலைத்திட்டங்களை கிராம மட்டத்தில் இருந்து முன்னெடுக்குமாறும் அமைப்பாளர்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட விரும்பும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை காலதாமதமின்றி கட்சி தலைமையகத்திற்கு தபால் மூலம் அனுப்பி வைக்குமாறும் கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் தமது விண்ணப்பங்களை பொதுச் செயலாளர், ஐக்கிய தேசியக் கட்சி,இல.400. பிட்ட கோட்டை, கோட்டை. எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், இது தொடர்பில் 0112878123 மற்றும் 0777238659 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.



# பாராளுமன்றத்தின் நுழைவாயிலில் ஐக்கிய மக்கள் சக்தி போராட்டம்!

## காடழிப்பு நடவடிக்கைக்கு எதிராக

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் பெருமெடுப்பில் காடழிப்பு இடம்பெறுவதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வரும் நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற நுழைவாயிலில் போராட்டம் நடத்தினர்.

'காடழிப்பை நிறுத்து' என்ற வாசகங்களுடன் கூடிய பதாதைகளை தாங்கியபடி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் பாரிய காடழிப்பு நடைபெற்று வருவதாகவும், அதை உடனடியாக நிறுத்துமாறு அவர்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

# குருந்தூர்மலையை சுற்றியுள்ள மேலும் 400 ஏக்கரை பௌத்த பூமியாக்க முயற்சி

முல்லைத்தீவு, மார்ச் 24

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையைச் சுற்றியுள்ள மேலும் 400 ஏக்கர் காணியை, பௌத்த பூமியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளருக்கு, தொல்பொருள் திணைக்களம் எழுத்துமூலமாக அறிவித்துள்ளது.

குருந்தூர் மலையை சுற்றியுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அமைந்துள்ள பகுதிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு குறித்த எழுத்து மூல அறிவிப்பில் கோரப்பட்டுள்ளது.

குறித்த 400 ஏக்கர் காணியில், சுமார் 150 ஏக்கர் காணி, தண்ணி முறிப்பு கிராமத்திற்கு உரிய தமிழ் மக்களுடையது என்பதுடன், மிகுதி காணிகள் நாகஞ்சோலை வனப்பகுதியில் உள்ளடங்குவதாக கூறப்படுகிறது. எதிர்வரும் முதலாம் திகதி முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இந்தக் கூட்டத்தில், 400 ஏக்கர் காணியைத் தொல்பொருள் திணைக்களம் கோரிய விடயம் குறித்து ஆராயப்படவுள்ளது.

அதன் நிகழ்ச்சி நிரலில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களின் அபிலாஷைகளை படுகுழிக்குள் தள்ளிய அரசு!

## சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மார்ச் 24

அரசாங்கம், தனது பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக வாக்களித்த 69 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் அபிலாசைகளை படுகுழிக்குள் தள்ளியுள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்தின் தற்போதைய செயற்றிட்டங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளதாவது:

நாட்டில் ஊழல் மற்றும் மோசடி ஆகியன அதிகரித்துள்ளன. இந்நிலையில் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும் ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தல் நீண்டு கொண்டு இருக்கின்றது.

அரசாங்கம் அதன் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக வாக்களித்த அனைத்து மக்களினதும் அபிலாசைகளை படுகுழிக்குள் தள்ளியுள்ளது.

பொய்களை பரப்புவதன் ஊடாக மக்கள் எதிர்ப்பை அதிகரித்து வரும் நிலையில், அரசாங்கம் அதற்கான தீர்வுகளை தேடுகிறது.

மேலும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அரசாங்கத்தைச் சேர்ந்த சில அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல்களும் கூட்டங்களும் நடந்துள்ளன என்ற ஆதாரமற்ற செய்திகளை உருவாக்குவது அரசாங்கத்தின் குறைந்த மனநிலைமையை காட்டுகின்றது-என்றார்.

# தேசிய அடையாள அட்டை வழங்கும் ஒருநாள் சேவை விரைவில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 24

கொரோனா அச்சம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த தேசிய அடையாள அட்டையை ஒரு நாள் சேவையின் கீழ் பெற்றுக் கொள்ளும் முறையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தச் சேவையானது கொரோனா தொற்று பரவல் காரணமாக மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் வகையில், கடந்த காலங்களில் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.

மேலும், தேசிய அடையாள அட்டையை பெறுவதற்காக பத்தரமுல்லை தலைமைக் காரியாலயத்திற்கு அல்லது தென் மாகாண காரியாலயத்திற்கு வர இருப்பார்களாயின் அதற்கான குறித்த திகதி மற்றும் இலக்கமொன்றையும் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அந்தப் பிரதேச செயலாளர் காரியாலயத்தின் தேசிய அடையாள அட்டை பிரிவுக்குச் சென்று அல்லது 0115 226 100, 0115 226 100 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு இந்த சேவையை பெற்றுக் கொள்வதற்கான விளக்கத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

# அழகுசாதனப் பொருள்கள் இறக்குமதி குறித்து சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி முடிவு

கொழும்பு, மார்ச் 24

அழகுசாதனப் பொருட்களின் இறக்குமதியை முறையாகக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி முடிவொன்றை எட்டவேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகுசாதன பொருட்கள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அழகுசாதனப் பொருட்களின் இறக்குமதி கடந்த சில ஆண்டுகளில் 100 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் மொஹமட் முஸம்மில் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஒரு தரத்திற்கு ஏற்ப குறித்த பொருட்களை இறக்குமதி செய்வது குறித்து சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் முறையான திட்டம் செயற்படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார்.

# கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது இந்தியாவுக்கு கொடுக்கவேமாட்டோம்!

## அமைச்சர் விமல் திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 24

'யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது. கச்சதீவு ஒப்பந்தத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் இந்தத் தீவை இந்தியாவுக்குத் தாரைவார்க்கமாட்டோம்."

- இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இந்தியாவின் மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்கு வரத்துத்துறை இணை அமைச்சர் வி.கே.சிங், கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப் பெறுவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம் என்று அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அமைச்சர் விமல் வீரவன்ஸ கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

அன்று இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்த கச்சதீவை, இந்திய மத்திய அரசு, ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு முழுமையாக வழங்கிவிட்டது.

இந்தநிலையில், இன்று இந்திய அரசியல்வாதிகள் கச்சதீவை உரிமை கோருவதை நினைக்கும்போது வேடிக்கையாகவுள்ளது.

ஒப்பந்தத்தின்படி கச்சதீவிலுள்ள அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் இரு நாட்டு மக்களும் ஒவ்வொரு வருடமும் கலந்துகொள்வார்கள். தமிழக மீனவர்களும் இந்தத் தீவில் தங்கித் திரும்புவார்கள்.

அதற்காக இலங்கையின் சொத்தான கச்சதீவை இந்தியாவுக்கு நாம் தாரைவார்க்கமாட்டோம். தமிழக மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடிக்க அனுமதி வழங்கமாட்டோம்-என்றார்.

## தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பதவியிலிருந்து திடீர் இராஜினாமா!

கொழும்பு, மார்ச் 24

தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக களுவேவா தனது பதவியிலிருந்து திடீரென இராஜினாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே அவர் பதவி துறந்ததாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். நான்கு தினங்களுக்கு முன்னர் தனது இராஜினாமா கடிதத்தை அவர் கையளித்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



நாலக களுவேவா 2018 ஆம் ஆண்டு 52 நாள் அரசியல் நெருக்கடி காலகட்டத்தில் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## காடழிப்பு குற்றச்சாட்டின் பேரில் பிரதேச சபை உறுப்பினர் கைது!

பத்தேகம, மார்ச் 24

பத்தேகம திபில்ல வனப் பகுதியில் சட்டவிரோதமாக காடழிப்பில் ஈடுபட்ட பத்தேகம பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

33 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வடக்கு, கிழக்கு மாகாண அதிபர் ஆசிரியர்களுக்கு மன அழுத்தம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுகின்ற பெருமளவான அதிபர்கள், ஆசிரியர்கள் மன அழுத்தங்களுக்கு உட்படுத்தப்படுவதோடு அதனால் தீராத நோய்கள் ஏற்பட்டு மரணங்களும் நிகழ்கின்றன.

-இவ்வாறு சுட்டிக்காட்டி கவலை வெளியிட்டுள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

இது குறித்து சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்-

01. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பாடசாலைகளுக்கான அதிபர் நியமனம், ஆசிரிய நியமனம் என்பவற்றில் பல்வேறு குழறுபடிகள் நடைபெறுகின்றன.

பாடசாலைகளின் தரத்துக்கு ஏற்ப அதிபர்கள் நியமிக்கப்படுவதுமில்லை. வெற்றிடங்களை நிரப்புவதும் இல்லை. அதிபர் சேவை தரம் 1இல் உள்ளவர் தரம் 3 பாடசாலையிலும், அதிபர் சேவைத்தரம் 3 இல் உள்ளவர் 1ஏபி பாடசாலையிலும் கடமையாற்றுகின்றார். பெருமளவான கஸ்ட, அதிகஸ்ட பிரதேச பாடசாலைகளில் அதிபர் சேவையில் உள்ளவர்கள் கடமையில் இல்லை. மாறாக சேவைக் கொடுப்பனவுகள் ஏதுமின்றி ஆசிரியர்களே அதிபர் கடமையில் உள்ளனர்.

ஆசிரிய நியமனங்கள் எவையும் நியாயமாக நடைபெறுவதில்லை. ஒரு சில இடங்களில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர். கஸ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் அவசியமான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. வடக்கு மாகாணத்தில் அனைத்து வலயங்களிலும் ஆசிரியர்கள் மேலதிகம். மாறாக ஆசிரிய ஆளணிக்குப் பொருத்தமில்லாமலும் சீர் செய்யப்படாமலும் உள்ளனர்.

02. ஆசிரிய இடமாற்றங்கள் ஏனைய மாகாணங்களைவிட வடக்கு-கிழக்கில் அதிகாரத்தில் உள்ளவர்களின் விருப்பப்படியே நடைபெறுகின்றன. கிழக்கு மாகாணத்தில் வலயங்களுக்கு இடையிலான ஆசிரிய இடமாற்றம் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களின் பதவி மோகத்தால் பல ஆண்டுகள் நடைபெறவில்லை.

03. வடக்கு மாகாணத்தில் அரச சுற்றறிக்கைக்கு (2007-20) மாறாக மேன்முறையீடுகள் எதனையும் ஏற்காமல் தாம் சொல்லும் இடத்திற்கு செல்லவேண்டும் என்ற உத்தரவு. ஒரு பாடசாலையில் ஒரு பாடத்திற்கு ஒரேயொரு ஆசிரியர் இருந்தால் அவருக்கும் இடமாற்றம். அவர் இடமாற்றம் செய்யப்பட்ட இடத்தில் ஆசிரியர்கள் மேலதிகம். பின்னர் நேரசூசிகை இல்லாதவர்களின் வேதனம் நிறுத்துவதாக அச்சுறுத்தல். இதற்கு கணக்காய்வுத் திணைக்களம் சாட்டு.

04. ஏழு ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நேரசூசிகை வழங்கக்கூடாது என கல்விப்பணிப்பாளர் கட்டளை. அவர்கள் இன்னுமொரு பாடசாலைக்கு மேலதிக ஆளணியாக அதிரடி இடமாற்றம். கடிதம் வரும். மேன்முறையீடு செய்யாமல் கடமையேற்கவேண்டும் என்ற கட்டளை.

இவை போன்ற ஏராளமான விடயங்களால் அதிபர்களும், ஆசிரியர்களும் மன அழுத்தங்களுக்கு உட்பட்டு சேவையில் இருந்து இடைவிலகுவதும், முன்னரே ஓய்வுபெறுவதும், நோய்வாய்ப்படுவதும், மரணிப்பதும் வடக்கு-கிழக்கில் சாதாரணமாகிவிட்டது.

தற்போதைய நிலையில் ஏனைய மாகாணங்களை விட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பின்னிலையில் இருப்பதற்கு இதுவே மூல காரணம்.

ஆசிரிய தொழில் பிற தொழில்கள் போன்றதல்ல. மனமகிழ்ச்சியுடன் செய்ய வேண்டிய தொழில்.

அதிகாரங்களைப் பயன்படுத்தி கருமமாற்றுவது இத் தொழிலுக்குப் பொருந்தாது.

-இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் பேக்கரி பொருட்கள் விலை உயரும்

கொழும்பு, மார்ச் 24

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் அனைத்து பேக்கரி பொருட்களின் விலையும் அதிகரிக்கும் என அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இறக்குமதி கட்டுப்பாடுகள், வரி மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்பு ஆகியவையை அடிப்படையாக கொண்டே குறித்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

எண்ணெய் மற்றும் வெண்ணெய்க்கு அதிக வரி விதிக்கப்படுவதால் பேக்கரி தொழில் கடுமையாக பாதிக்கப்படுகின்றது.

இதேவேளை, மற்றைய பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன என குறிப்பிட்ட சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்த்தன, இதுகுறித்து தெரிவித்தும் எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை எனவும் கூறினார்.

எனவே பண்டிகைக் காலத்தில் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

## அமர்வு இடம்பெற்றபோது சுற்றித்திருந்த உறுப்பினர்கள்

### கண்டித்தார் சபாநாயகர்

கொழும்பு, மார்ச் 24

பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும்போது உறுப்பினர்கள் சுற்றித் திரிவதைத் தவிர்த்து தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அமருமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகியபோது, சில உறுப்பினர்கள் சுற்றி நடப்பதும் மற்றவர்களுடன் கலந்துரையாடுவதுமாக இருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற அதிகாரிகளால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அறிவிக்கப்பட்டது.



இதனை அடுத்து அமர்வு நடைபெறும்போது தனித்தனியே கலந்துரையாடலை நடத்த வேண்டாம் என்றும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமருமாறும் சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார்.

## கடத்தப்பட்ட மகனின் கதி அறியாமலே மற்றொரு தந்தை வவுனியாவில் மரணம்

வவுனியா, மார்ச் 24

வவுனியாவில் காணாமல் போன தனது மகனைத் தேடி வந்த தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வவுனியா விநாயகபுரம் பகுதியை சேர்ந்த கனகையா ரஞ்சனாமூர்த்தி (வயது-63) என்ற தந்தையே மரணமடைந்துள்ளார்.

இவரது மகனான தற்போது 40 வயதாகும் செல்வநாதன் கடந்த 2007 ஆம் ஆண்டு தந்தைக்கு உணவுகொண்டு செல்லும்போது வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டிருந்தார்.

அவரைத்தேடி வவுனியாவில் கடந்த 1495 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்திலும் குறித்த தந்தை கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தரப் போராடியிருந்தார்.

இந்நிலையில் மகனை காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெற்றிபெறப் போவது யார்?



# தி.மு.க, அதிமுகவின் கணிப்புக்கள் இது...

பாலசிங்கம்

நாட்கள் நெருங்க நெருங்க தமிழகத்தில் தேர்தல் பதற்றம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. ஒரு பக்கத்தில் கொரோனாவைக் காரணம் காட்டி தேர்தலை தள்ளி வைத்து விடுவார்களோ என்ற அச்சம் பரவிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் அதைப் பற்றி எந்தக் கவலையுமின்றி, தேர்தல் பிரச்சாரங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் குவிந்து தலைவர்களின் பேச்சைக் கேட்பதைப் பார்க்க முடிகிறது.

யாராவது இரண்டு பேர் ஒன்று கூடினாலே 'அடுத்து யாரு ஆட்சிங்க வரும்' என்ற கேள்வியோடுதான் பேச்சைத் துவக்குகிறார்கள். இந்த விவாதம், மக்களுக்குள் மட்டுமில்லை கட்சிகளை வழி நடத்தும் தலைவர்களுக்குள்ளும் நடந்து கொண்டேயிருக்கிறது. கள நிலவரத்தை அறிந்தே அவர்கள் அடுத்தடுத்த தேர்தல் வியூகங்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போதுள்ள சூழ்நிலையில், கருத்துக் கணிப்புகள் பெரும்பாலும் திமுகவுக்குச் சாதகமாக வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நாளுக்கு நாள் போட்டி கடுமையாகிக் கொண்டிருக்கிறது. திமுக நினைப்பதைப் போல எளிதான வெற்றி எங்குமே கிடைக்காது என்ற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. போட்டியை இன்னும் கடுமையாக்கி வெற்றியைத் திசை திருப்புவதற்கான வேலைகளில் அதிமுக தீவிரமாக இறங்கியிருக்கிறது. திமுகவும் திருப்பியடித்துக் கொண்டிருக்கிறது.

அடுத்து நம்ம கட்சிதான் ஆட்சியைப் பிடிக்குமென்ற நம்பிக்கையில் இரண்டு கட்சிகளும் இருப்பதுதான் மக்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறது. இந்த நம்பிக்கையை ஏற்படுத்தும் காரணிகள் என்னென்ன, களநிலவரத்தை இவர்கள் எப்படி அறிந்து வைத்திருக்கிறார்கள் என்று அதிமுக, திமுக இரண்டு தரப்பிலும் மிகமிக முக்கியமான தலைவர்களிடம் பேசினோம். ஒவ்வொரு தரப்புடன் பேசும்போதும் அவர்கள் சொல்வதுதான் சரியென்று நம்மை நம்ப வைப்பதைப் போலிருக்கின்றன அந்தக் காரணிகள்.

தி.மு.கவின் நம்பிக்கை என்னவாயிருக்கிறது....திமுக தலைமைக்கு நெருக்கமான ஒருவர் சொல்வதைக் கேட்போம்....

''எங்களுடைய முதல் வெற்றியே, நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற கூட்டணியை உடைய விடாமல் அப்படியே தக்க வைத்ததுதான். திமுக கூட்டணிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டு, சில கட்சிகள் வெளியே போய் விடும் என்று நினைத்தார்கள். அதை முறியடித்தோம். ஆனால் ஏற்கெனவே தோல்வியைச் சந்தித்த அதிமுகவின் கூட்டணி மேலும் உடைந்திருக்கிறது. தேமுதிக வெளியேறிவிட்டது. சமத்துவ மக்கள் கட்சி, புலிப்படை, கொங்கு இளைஞர் பேரவை என பல கட்சிகளும் அ.தி.மு.க. கூட்டணியில் இப்போது இல்லை.

அதேநேரத்தில் வடக்கு மாவட்டங்களில் உள்ள மற்ற சமுதாயத்தினர் அனைவரும் இந்த இட ஒதுக்கீடு கொடுத்ததால் அதிமுக மீது வெறுப்பாகவுள்ளனர். அதனால் வடக்கு மாவட்டங்களில் எங்களுக்கு பெரும் வெற்றி கிடைக்குமென்று நம்புகிறோம். அடுத்ததாக பிஜேபி அந்தக் கூட்டணியில் நீடிப்பது எங்களுக்குப் பெரும்பாக்கியம். அதுதான் எங்களுடைய விருப்பமாகவும் இருந்தது. ஏதேதோ செய்து பிஜேபியை எடப்பாடி கழற்றி விடுவார் என்று நினைத்தோம். அவரால் அது முடியவில்லை. தமிழகத்தில் பிஜேபி மீது கடுமையான அதிருப்தி இருக்கிறது. அது அதிமுக மீதும் பாயப்போகிறது.

அமமுக தனித்து நிற்பது அதிமுகவுக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தும். தினகரன் களத்தில் கடுமையாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் அதிமுக வாக்குகளை அதிகளவில் பிரிப்பார் என்பது நிச்சயம். சசிகலாவை எடப்பாடி பழனிசாமி அவமதித்துப் புறக்கணித்து விட்டதாக அந்த சமுதாயத்தின் மக்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள். இது தெற்கு மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் நாங்கள் வெற்றி பெறுவதற்கு பெரும் உதவியாக இருக்கும்.

அதிமுக அரசின் மீது எந்த அதிருப்தியும் இல்லை, பாதிப்புமில்லை என்று திட்டமிட்டு ஒரு செய்தியைப் பரப்புகின்றார்கள். ஆனால் ஒவ்வொரு துறையிலும் பயங்கரமான ஊழல் நடந்திருக்கிறது. கிராமங்களிலேயே மக்கள் இதைப் பேசுகின்ற நிலைமை உள்ளது. இது எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த ஆட்சி நீடிக்க வேண்டாம் என்று அதிமுகவின் அடிமட்டத் தொண்டர்களே நினைக்கின்ற நிலைமை உள்ளது. அதற்கு முதல் காரணம், அவர்கள் பெரிதும் நேசித்த ஜெயலலிதா, எப்படி இறந்தார் என்பது கூட இன்னும் தெரியாமல் இருப்பதுதான். ஆட்சி மாறினால்தான் அவருடைய மரணத்தின் உண்மை வெளிவருமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

அதிமுகவில் முக்கியமான இடத்திலிருக்கும் ஒரு அமைச்சரே, 'கட்சியை எதிரிகளிடமிருந்தும், துரோகிகளிடம் இருந்து காப்பாற்றியிருக்கிறோம். டெல்லியில் ஏதேதோ செய்து ஆட்சியைக் காப்பாற்றியிருக்கிறோம் என்று நாம் மார்தட்டிக் கொள்ளலாம். அதனால் மக்களுக்கு என்ன பயன்.. மீண்டும் நாம் ஜெயிப்போம் என்ற நம்பிக்கை எனக்குத் துளியும் இல்லை. அதிகபட்சமாக 40 சீட்டுகள் வந்தாலே பெரியது என்று நினைக்கிறேன்!' என்று புலம்பியிருக்கிறார். ஓபிஎஸ்சும் கூட, 'அமமுகவை மீண்டும் கட்சியில் சேர்க்காவிட்டால் தென் மாவட்டங்களில் பெரிய பாதிப்பு ஏற்படும். சொல்லப் போனால் நான் ஜெயிப்பதே கஷ்டம்தான்' என்று அமித்ஷா விடமே சொன்னதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. அதனால் 150லிருந்து 200 தொகுதி வரை நாங்கள் ஜெயிப்பது உறுதி'' என்றார்கள் தீர்க்கமான குரலில்.

அதிமுக தலைமை என்ன நம்பிக்கையில் இருக்கிறது என்று அக்கட்சியை வழி நடத்துவதில் முக்கியப் பொறுப்பிலுள்ள ஒருவரிடம் கேட்டதற்கு அவரும் விரிவாக விளக்கினார்....

''ஸ்டாலின் 200 சீட்டுகள் ஜெயிப்போம் என்று நினைப்பதுதான் எங்களுக்கு பலம். அவர் கடுமையாக உழைப்பார். ஆனால் ஒவ்வொரு தேர்தலிலும் அவர் போடும் கணக்கு தப்பாகத்தான் போகிறது. ஆர்கே நகர் இடைத்தேர்தலில் கூட, கடைசி வரை ஜெயிப்போம் என்றுதான் அவர் சொல்லிக் கொண்டிருந்தார். எங்களுக்கு எங்குமே மக்களிடம் எதிர்ப்பு இல்லை. சீட் கிடைக்காததால் கட்சிக்காரர்கள் கொஞ்சம் அதிருப்தியில் இருந்தனர். அதெல்லாம் சரி செய்து விட்டோம்.

எத்தனையோ தடைகளைத் தாண்டி இந்த ஆட்சியைக் காப்பாற்றிக் கொண்டு சென்றதில், அதிமுகவினர் அனைவருமே பெரும் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எடப்பாடி பழனிசாமி தலைமை மீது பெரும் நம்பிக்கை வந்திருக்கிறது. அடிமட்டத் தொண்டர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு களத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு மாவட்டங்களைப் பொருத்தவரை, பாமகவின் வாக்கு வங்கி சரிந்த நேரத்தில் நாங்கள் பத்தரை சதவீத இட ஒதுக்கீட்டை அறிவித்திருக்கிறோம். அது வன்னியர் சமுதாயத்தில் ராமதாசுக்கு இருந்த செல்வாக்கை மீண்டும் மீட்டெடுத்திருக்கிறது. அதனால் அந்த சமுதாயத்தின் வாக்குகள் அப்படியே எங்கள் கூட்டணிக்குக் கிடைக்குமென்பது நிச்சயம். அதே வடக்கு மாவட்டங்களில் விடுதலைச் சிறுத்தைகளுக்குச் செல்வாக்கு இருக்கும் பகுதிகளில் உள்ள வாக்குகளைக் கவர்வதற்காகவே, பெண்களுக்கு மாதம் 1500 ரூபாய், வீட்டுக்கொரு வாஷிங் மெஷின் திட்டம் என அறிவித்திருக்கிறோம். அதெல்லாம் அங்கே நன்றாக எடுபட்டிருக்கிறது. ரிசல்ட் வரும்போது அது உங்களுக்குத் தெரியும்.

எங்களுடைய தேர்தல் அறிக்கை வேலை என்ன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது இன்னும் சில நாட்களில்தான் தெரியவரும். இப்போதைய நிலவரப்படி திமுகதான் முன்னணியில் இருக்கிறது. திமுக 130-135 தொகுதிகளிலும், 90-95 தொகுதிகளில் நாங்களும் முன்னணியில் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. திமுக ஜெயிக்கும் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும், அதிமுக ஜெயிக்கும் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் என்ன செய்ய வேண்டுமோ நாங்கள் அதைச் செய்து கொண்டிருக்கிறோம். அது சரியாக முடிந்து விட்டால் கட்டாயம் எங்கள் ஆட்சிதான் மீண்டும்!'' என்றார்கள்.

இந்த இரண்டு தரப்பு யூகங்களும், வியூகங்களும் களத்தில் எப்படி ஆகுமென்று, தமிழக காவல்துறையின் முக்கியமான போலீஸ் அதிகாரி ஒருவரிடம் கேட்டோம்...

''திமுக அமோக வெற்றி பெற்றுவிடுமென்று முதலில் எல்லோரும் நினைத்தது உண்மைதான். ஸ்டாலினும் அதை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்தத் தகவலை வைத்துக் கொண்டு, திமுக வேட்பாளர்கள் பலரும் காசைக் கையில் எடுக்காமல் மிதப்பில் இருக்கிறார்கள். சில வேட்பாளர்கள் இப்போதே ஜெயித்து விட்டதைப் போல உதாசினமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். அதெல்லாம் அந்தக் கட்சியின் நிர்வாகிகளையே கடுப்பாக்கியிருக்கிறது. ஏற்கெனவே பத்தாண்டுகளாகக் காய்ந்து கிடக்கும் அந்தக் கட்சியினர் எளிதில் விலை போவதற்கும் வாய்ப்பு அதிகமுள்ளது. ஆனால் அதிமுக நேரடியாக நிற்கும் தொகுதிகளில் பணத்தாலேயே எல்லோரையும் அடித்துத் துவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்துவதைப் பார்க்க முடிகிறது. தேர்தல் நெருங்க நெருங்க பணப்பட்டுவாடா பெரிய மோதலாக வெடிக்கும் அபாயம் அதிகமிருக்கிறது. மேற்கு மாவட்டங்களில் சில வி.ஐ.பிக்கள் நிற்கும் தொகுதிகளில் தேர்தல் நிறுத்தப்படவும் கூட வாய்ப்பிருக்கிறது. இன்றைய நிலையில் தி.மு.கவுக்கு வாய்ப்பு அதிகமிருந்தாலும், கொஞ்சம் அசந்தால் அதிமுக 2016 வரலாற்றை மீண்டும் எழுதிவிடுவது உறுதி!'' என்றார். ■

# அர்ஜூன் மகேந்திரன் இல்லாமல் பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணையை நடத்த முடியாதா?



## சுனில் ஹந்துநெத்தி நேர்காணல்

தமிழில் - சேகு

தற்போதைய அரசாங்கத்தின் fast track முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமையலறை போன்றது என கோப் குழுவின் முன்னாள் தலைவரும், மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினருமான சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அந்த செவ்வியின் முழுவடிவம் வருமாறு:

**கேள்வி:** *நீங்கள் கோப் குழுவின் முன்னாள் தலைவர் என்ற வகையில் தற்போதைய அரசாங்கத்தில் கோப் குழுவின் செய்றபாடு தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?*

அது தொடர்பில் மக்களே ஆராயக்கூடியதாகவிருக்கும். ஏனெனில் நாம் கோப் குழுவில் இருக்கும் போது ஊடகங்களுக்கு அந்த செய்திகளை சேகரிக்கக்கூடியதாகவிருந்தது. அவர்கள் எந்த அளவிற்கு அதில் அவதானம் செலுத்தினர் என்பதை யாவரும் அறிவர். ஆனால் தற்போது என்ன நேர்ந்துள்ளது? உண்மையில் பாராளுமன்றத்தில் கோப்குழு இல்லை என்பது போல் தான் தோன்றுகின்றது. பாராளுமன்றத்தில் அந்த தெரிவிக்குழு சில தடவைகள் கூடுவதாக இருக்கலாம். ஆனால் அது மக்களுடன் தொடர்புபட்டதாக இல்லை. அண்மையில் பல விடயங்கள் பேசுபொருளாக இருந்தன. ஆனால் இப்பொழுது அந்த விடயங்கள் தொடர்பில் பேசப்படுவதில்லை.

உதாரணத்திற்கு மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விடயத்தை குறிப்பிடலாம். திருடர்களை பிடிப்போம். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவோம் என்றெல்லாம் இவர்கள் கூறினர். ஆனால் இன்று அந்த விடயம் தொடர்பில் கோப் குழுவில் பேசப்படுவதில்லை. அது தொடர்பான எந்த கதையும் இல்லை. இது மிகப்பெரிய மோசடியாகும். இது தொடர்பில் நாம் ஊடகங்களின் வாயி லாக நேரடியாக ஒளிபரப்பினோம். ஆனால் தற்போது அந்த செயற்பாடுகள் இடம் பெறுவதாக தெரியவில்லை.

**கேள்வி:** *கோப் குழு குறித்த விவகாரம் தொடர்பில் அழைத்து விசாரணைகளை மேற்கொள்ளத் தயாராகவிருந்த நிறுவனங்கள் தொடர்பான விசாரணைகள் நிறுத்தப்பட்டன. தற்போது அந்த செயற்பாடுகள் இடம் பெறுகின்றனவா?*

அவை அனைத்தும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. மின்சாரசபை தொடர்பில் மின்சாரக் கொள்வனவு தொடர்பில் நாம் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுவந்தோம். இலங்கை கிரிக்கட் சபையில் இடம் பெற்றதாக கூறப்படும் ஊழல், மோசடி தொடர்பில் நாம் விரிவான விசாரணைகளை மேற்கொண்டோம். அதே போன்ற பல விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அது தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கலாம்.

**கேள்வி:** *சதோசாயின் ஊடாக 85 ருபாவிற்கு சீனி விநியோகிக்கப் படுவதாக கூறப்படுகின்றதே?*

சீனியை சந்தைக்கு கொண்டுவந்து 85 ருபாவிற்கு வழங்கியிருந்தால் அதனை நாம் மக்களுக்கு இலாபம் எனவும் அரசாங்கம் மக்களுக்கு நன்பையக்கும் நோக்கிலேயே இதனை முன்னெடுத்ததாவும் கூறலாம். ஆனால் தற்போது அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. மாறாக சீனி 85 ருபாவிற்கு சதோசாவின் ஊடாக வழங்கப்படுவதிலும் சிக்கல் நிலைமை உள்ளது. ஏனெனில், சதோசாவுக்கு சீனியை வழங்க வந்த வியாபாரிகளிடம் அதிகப்படியான விலைக்கு கொள்வனவு செய்தே அதனை குறித்த விலைக்கு விநியோகித்தனர். 127, 120, 118 மற்றும் 110 ருபாவிற்கே சதோசசீனியை கொள்வவு செய்து கொள்கின்றது. அவ்வாறாயின் அரசாங்கத்திற்கு இது மிகப் பெரிய இழப்பாகும். சதோசா நிறுவனத்தின் இன்னமும் கூட நட்டத்திலிருந்து மீளவில்லை என்பது குறித்து எவரும் கவனம் செலுத்தவில்லை.

**கேள்வி:** *அவ்வாறாயின் இப்பொழுது ஏற்பட்டுள்ள 1595 கோடி ருபாவிற்கும் அதிகபடியான நட்டம் ஏற்பட்டுள்ளதா?*

ஆம் நிச்சயமாக. சதோசாவுக்கு சீனி தேவை என யார் ஆர்பாட்டம் செய்தது? பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் தெரிவுக்குழு அறிக்கையிலும் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது சீனி குதங்களில் இருக்கும் 10 ஆயிரம் மெட்ரிக்தொன் சீனியை வியாபாரிகள் விடுவித்துள்ளதாக தெரிவிக்கபட்டுள்ளது. அதுவும் 25 சத வரிக்கு. அப்படியென்றால் அவர்கள் இலாபம் உழைக்கின்றனர்.

**கேள்வி:** *நுகர்வோர் விவகார அமைச்சர் அவ்வாறு சீனி கொள்வனவின் போது ஊழல் மோசடி எதுவும் இடம் பெறவில்லை என தெரிவித்திருக்கின்றாரே?*

இதில் உள்ள பிரச்சினை பணம் செலுத்துவதல்ல. சந்தை நிலமையின் காரணமாக ஏற்பட்ட நிலைமையே இது. இது தொடர்பில் அரசாங்கம் எவ்வாறுவாத விவாத்தில் ஈடுபட்டாலும் அரசாங்கத்திற்கு சதோசாவின் ஊடாக மாத்திரமே சீனியை விநியோகிக்கக் கூடிய நிலைமை உள்ளது. சந்தை நெகிழ்ச்சி தன்மையை நிர்வகிப்பதற்கு அரசாங்கத்திடம் இருக்கும் ஒரு கருவியே சதோசா.

**கேள்வி:** *சீனியை களஞ்சியப்படுத்தி வைத்து அதிலிருந்து விநியோகிப்பதற்கு வியாபாரிகளுக்கு கடந்த அரசாங்கமே அனுமதியளித்ததாக தற்போதைய அரசாங்கம் கூறுகின்றதே?*

எந்த அரசாங்கமாக இருந்தாலும் பிழையே இடம் பெற்றுள்ளது. மக்களுக்கு அது தேவைப்படாதே. அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கடந்த அரசாங்கத்தை குற்றம் சாட்டுவர் ஆயின் இதில் உள்ள பிரச்சினை ஊழல் ஆகும். அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் இது தொடர்பில் வினவவில்லை எனின் குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்றிருக்காது. அதே போல் இது ஒரு சாதாரண கொடுக்கல் வாங்கலாகவே அமைந்திருக்கும். அனால் இது அவ்வாறான கொடுக்கல் வாங்கல் அல்ல மாறாக அரசியல் பின்னணியுடன் மத்தியவங்கி பிணைமுறி மோசடி போன்று இடம் பெற்றிருக்கும் பாரிய நிதி மோசடியாகும்.

**கேள்வி:** *சீனி வரி மோசடியும், பிணைமுறி மோசடியையும் எப்படி ஒன்றாக்க முடியும்?*

சீனித்தொகை நாட்டில் இருந்த போதிலும் பெருமளவிலான சீனியை நாட்டிற்கு கொண்டுவருவதற்கான காரணம் என்ன 3 இலட்சத்து 20 ஆயிரம் கிலோ சீனியை கொண்டுவரும் போது அதில் 1 இலட்சத்து 25 ஆயிரம் சீனித் தொகையை வில்மா நிறுவனம் மாத்திரம் கொண்டுவருவது எப்படி?

நாம் கடையில் சீனி ஒரு கிலோ வாங்குவதை போன்றதொரு விடயம் இல்லையே கப்பலில் சீனி கொண்டு வருவது என்பது. அதேபோல் நாட்டினுள் சீனி தொடர்பில் ஆர்பாட்டங்களும் இடம் பெறவில்லையல்லவா?

**கேள்வி:** *இந்த விவகாரத்தில் வில்மா நிறுவனம் பிரச்சித்தமாக காரணம் என்ன?*

இந்த கொடுக்கல் வாங்கல்களில் தெளிவாக தெரியும் நிறுவனமாக இருப் பதன் காரணமாகவே பிரசித்தி பெற்றுள் ளது. அதேபோல் ஜனாதிபதி தேர்த லின் போது வியத்மக அமைப்புடன் சேர்ந்து அரசியல்கொடுக்கல் வாங்கல்களை இந்த நிறுவனம் மேற்கொண்டமையை அனைவரும் அறிவர்.

**கேள்வி:** *குறித்த நிறுவனத்தின் உரிமையாளருக்கு அரசியல் செல்வாக்கு இருக்கும் நிலையில் நீங்கள் நீதிமன்னத்தில் தாக்கல் செய்த மனுவிற்கு நியாயம் கிடைக்கும் என நம்புகின்றீர் களா?*

உண்மையில் தொடர்பு இருக்கலாம். இதில் நுகர் வோருக்கு இலாபம் ஏற்படவும் இல்லை. அரசாங்கத்திற்கும் இலாபம் ஏற்படவில்லை. இந்த நட்டத்தை அரசாங்க தரப்பினர் ஈடுசெய்ய வேண்டும். இது மோசடியாக இடம் பெற்றுள்ள கொடுக்கல் வாங்கலாகும்.

**கேள்வி:** *வியாபாரியகளை இவ்வாறு பாதுக்கின்றார்கள் எனின் அவர்களை இரகரியமாக கொடுக்கல் வாங்கல் செய்ய அனுமதிக்கின்றார்கள் எனின் அரசாங்கத்திற்கு அது தொடர்பில் இருக்கும் அதிகாரம் என்ன?*

வியாபாரிகளை பாதுகாக்க வேண்டும்.அது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால் அரசியல் கொடுக்கல் வாங்கல்களை பாதுகாக்கவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லை. இது சாதாரயமாக வியாபாரம் அல்ல. இதனை கட்சி பேதமின்றி அனைவரும் எதிர்க்க வேண்டும்.

*மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாணாயக்க உள்ளிட்ட 8 சந்தேக நபர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறாயின் மத்தியவங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் இடம் பெறுகின்றனவா?*

தேர்தல் நெருங்கும் போதே குற்றம் இழைத்தவர்களை கைது செய்ய வேண்டும் தண்டனையை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு ஏற்படும்.

*முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் அர்ஜூன் மகேந்திரன் இல்லாமல் மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான வழக்கு விசாரணைகளை நடாத்த முடியாதா?*

நன்றாக நடத்தி செல்ல முடியும் என தற்போதைய அரசாங்க தரப்பினர் எதிர்க்கட்சியில் இருக்கும் போது கூறினர். கடந்த வார பத்திரிகைளை எடுத்து பாருங்கள், வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தல், கைதுகளை மேற்கொள்ளல், இனவாத்தை தூண்டுவது போன்ற விடயங்களையே காணக்கூடியதாகவுள்ளது. அவையனைத்தும் அரசியல் செயற்பாடுகள் ஆகும்.

**கேள்வி:** *கடந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் சமையலறை அமைச்சரவை போன்றதா தற்போதைய அரசாங்கத்தின் பாஸ் ரக் முறைமையும் என்கின்றீர்களா?*

அது அன்று இருந்த குற்றச்சாட்டாகும். நாமும் குற்ஞ்சாட்டினோம். ஆனால் அதுவே இன்றும் செயற்படுத்தப்படுகின்றது. ஆனால் அதேநிலைமையே தற்போதும் காணப்படுகின்றது.

அவை இறுதியில் கடன் அபிவிருத்தி திட்டமாக மாறும். அந்த கடனை மீள செலுத்த ஒப்பந்தங்களுக்கு அடிபணிய வேண்டிய நிலைமை ஏற்படும். அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்திற்கும் புறம்பாக செய்யும் பாஸ் ரக் முறையில் செயற்படல் திருட்டுக்கு வழிவகுக்கும். ■

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**24**

**2015 - 3**

01E. தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செயதல் இக்கேள்வியில் இரு முக்கோணங்களை வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. இம் முக்கோணங்களின் அடிகள் சமமானவை. இவ்விரு முக்கோணங்களை ஒன்றன் மீது ஒன்றினை வைக்கும்போது - உச்சிகள் பொருந்தும் வண்ணம் வைக்கும் போது - சிறிய முக்கோணத்தின் அடி சிறிது வெளித்தள்ளியிருக்கும். இது உரு 1.உரு 2 இல் தரப்பட்டிருக்கும். உரு2 இல் உள்ளது போல் சீராகப் பொருந்தாது.எனவே அதற்குரிய சரியான

**விடை 01**

**2016 - 28**

01E.தரப்பட்ட உருக்களை பொருத்தமான ஓர்முறையில் கூட்டங்களாக்குவதாகவோ அமையலாம். இங்கு கொடுக்கபபட்ட் விடைகள் மூன்றிலும் தரப்பட்ட உருக்கள் பயன்படுத்தபபட்டுள்ளது.விடை 3 பொருந்தாது ஏனெனில் சதுரத்திற்குப்பதிலாக நீள்சதுரம் வரையப்பட்டுள்ளது. விடை 1 பொருந்தாது ஏனெனில் சதுரத்தினுள் வட்டம் வந்துள்ளது. எனவே சரியான

**விடை 02**

**2019 - 17**


✡ கடதாசி துண்டு A யிலுள்ள இக் குறியீட்டின் மேல் கடதாசி துண்டு B யிலுள்ள # குறியீட்டினை வைக்கும் போது கடதாசி துண்டு B யில் இடப்புறமாக ஓரிடம் தள்ளும்.

○ எனவே ற்ப் பதிலாக ⊕ வரும்.. எனவே சரியான

**விடை 01**

**2020 - 13**

C உடன் C பொருந்தும்படி வைக்கும் போது



மேலெ காட்டியவாறு கட்டமைப்புகள் உருவாகும்
எனவே சரியான

**விடை 03**

**பெற்றோரின் கவனத்திற்கு .......**

ஈழ நாடு பத்திரிகையில் ஒரு நாள் வெளியாகும் வினாத்தாளை உங்கள் பிள்ளைகளைக் கொண்டு பயிற்சி செய்வித்து மறுநாள் புலமைச்சிகரத்தைக் கொண்டு மதிப்பீடு செய்தபின் விளக்கத்தை வாசித்து தவறுகளை விளக்கி பிள்ளைக்கு வழிகாட்டுங்கள்.நன்றி ஆசிரியர் அன்னமையா.

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# இலங்கையின் உள்ளக விவகாரத்தை இந்திய தேர்தல் பிரசாரமாக்கக்கூடாது

## திஸ்ஸ விதாரண சொல்கிறார்

கொழும்பு,மார்ச்.24

**இலங்கையின் உள்ளக விவகாரத்தை இந்திய மாநில தேர்தல் பிரசாரமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**



இதேவேளை, ஒட்டுமொத்த சிங்கள மக்களும், தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற நிலைப்பாட்டையே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இனப் பிரச்னைக்குத் தீர்வு புதிய அரசமைப்பின் ஊடாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

சர்வகட்சி குழு அறிக்கையை முழுமையாகச் செயல்படுத்தியிருந்தால். இனப் பிரச்னைக்குத் தீர்வு 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கிடைக்கப் பெற்றிருக்கும்.

அப்போதைய அரசாங்கம் இவ்விடம் குறித்து அக்கறை கொள்ளவில்லை. புதிய அரசமைப்பு தொடர்பிலான நிபுணர் குழுவினரிடம் சர்வகட்சிக் குழு அறிக்கையை இவ்வாரம் சமர்ப்பிக்கவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை, பிரேரணை மீதான வாக்கெடுப்பு குறித்து வினவிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியாவில் தமிழக மாநில தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள நிலையில் இலங்கையின் உள்ளக விவகாரம் அங்கு பிரதான பேசுபொருளாக காணப்படுகின்றது.

தமிழர் விவகாரம், ஈழம் ஆகிய விடயங்கள் தென்னிந்தியாவின் தேர்தல் மேடைகளில் பிரதான காரணியாகக் காணப்படுகின்றது. காலம்காலமாக உள்ள பிரச்னையை இந்தியா தேர்தல் காலத்தில் பயன்படுத்திக் கொள்வது பொருத்தமற்றது.

ஜெனிவா விவகாரத்தில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா செயல்படக் கூடாது என்று தென்னிந்திய அரசியல் பிரமுகர்கள் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது. இலங்கையின் உள்ளக விவகாரத்தை இந்தியத் தேர்தல் பிரசாரமாகப் பயன்படுத்திக் கொள்வது தவறாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பினரும் யுத்தக் குற்றச்சாட்டுக்களை மேற்கொண்டுள்ளனர். இவ்விடயம் குறித்து எத்தரப்பினரும் கருத்துரைப்பதில்லை. ஜெனிவா விவகாரத்தில் நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு உட்பட்டு தீர்மானங்கள் எடுப்பது அவசியமானதாகும்.

பல்லின சமூகம் வாழும் நாட்டில் ஓர் இனத்தின் உரிமைகள் அரசமைப்பின் ஊடாக முடக்கப்படும் போது அங்கு பிரிவினைவாதம் தோற்றம் பெறும் என்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு சிறந்த எடுத்துக்காட்டு. தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பு மாத்திரமல்ல அதற்கு முற்பட்ட கால அரசமைப்புக்கள் கூட முரண்பட்ட தன்மையிலும் பிற இனத்தின் உரிமைகளை முடக்கும் வகையிலும் காணப்பட்டன.

30 வருட கால சிவில் யுத்தம் தோற்றம் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும்.

தவறான நிர்வாகம் எல்லை மீறிய அதிகாரப் பிரயோகங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் பெறுவதற்கு பிரதான காரணியாக அமைந்தது.

பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டன. இதற்கு சர்வதேச நாடுகளின் சுயநல போக்கும் ஒரு காரணியாக இருந்தது- என்றார். (எ)

# பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் விபத்தில் மரணம்!

ராஜகிரிய, மார்ச் 24

கொழும்பு, ராஜகிரிய பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிக்கடை மேம்பாலம் மற்றும் ஆயுர்வேத சுற்றுவட்டத்துக்கு இடைப்பட்ட பகுதியில் வாகனங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உப பரிசோதகரும், லொறியொன்றின் உதவியாளருமே விபத்தில் உயிரிழந்தனர்.

இந்த இருவர் மீதும் வேகமாக பயணித்த வான் மோதியதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

விபத்தை ஏற்படுத்திய வான் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பில் வெலிக்கடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த சில மாதங்களாக நாடு முழுவதும் இடம்பெறும் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், இதுபோன்ற விபத்துக்களால் தினசரி சுமார் பத்து பேர் உயிரிழப்பதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண கூறினார். (எ)

# புதையல் தோண்டிய ஏழு பேர் கைதாகினர்!

புத்தளம், மார்ச் 24

புத்தளம், ஆனமடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொனிகல பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஏழு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். கைதான சந்தேக நபர்கள் ஆனடுவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, மேலதிக விசாரணைக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

சுற்றுச்சூழல் அழிவு, காடழிப்பு மற்றும் புதையல் வேட்டை குறித்து நடவடிக்கை மேற்கொள்ள இலங்கை பொலிஸ் புதிய விசாரணைப் பிரிவை நிறுவி வருவதாகவும், இதுதொடர்பில் அவசர அழைப்பு மேற்கொள்ள நான்கு இலக்கம் கொண்ட தொலைபேசி இலக்கங்களும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் பொலிஸார் கூறினர். (எ)




## முகக்கவச உற்பத்தி இயந்திரங்களை நன்கொடையாக வழங்கியது சீனா!

கொழும்பு, மார்ச் 24

சீனாவின் டி.எம்.ஐ. தொழில்துறை குழுமம் இலங்கைக்கு 30 செற் தானியங்கி முகக்கவச உற்பத்தி இயந்திரங்களை நேற்று முன்தினம் நன்கொடையாக வழங்கியுள்ளது என்று இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும் 60 முகக்கவசங்களை தயாரிக்க பயன்படுத்தப்படும் அதிநவீன இயந்திரங் களையும் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடைகளின் பெறுமதி 550 மில்லியன் ரூபாவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இலங்கைக்கு காலஅவகாசம் வழங்குவது பொறுப்புவாய்ந்த அணுகுமுறையாகாது

## சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 24

**இலங்கையில் பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்காக மேலும் கால அவகாசம் வழங்குவதென் பது சாத்தியமான அல்லது பொறுப்புவாய்ந்த அணுகு முறையாக இருக்காது என்ற ஐ.நா. மனித உரி மைகள் ஆணை யாளரின் மதிப்பீட்டை முழுமையாக ஆதரிப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் கொண்டு வரப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்று நடைபெற விருந்தது.

இந்நிலையில், இது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையால் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பதிவில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

இலங்கையில் மனித உரிமை நிலவரங்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் இங்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் ஏதுவான வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் பிரேரணைக்கு உறுப்புநாடுகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளடங்கலாக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான தீவிர ஒடுக்குமுறை குறித்து அவதானம் செலுத்தியிருக்கிறோம். அதுமாத்திரமன்றி இன மற்றும் மதரீதியான சிறுபான்மை சமூகங்களின் மீது தொடர்ந்து பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகளும் எமது கரிசனைக்கு உள்ளாகியிருக்கிறது.

அத்தோடு பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்காக மேலும் காலம் வழங்குவதென்பது சாத்தியமானஅல்லது பொறுப்புவாய்ந்த அணுகுமுறையாக இருக்காது என்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் மதிப்பீட்டை முழுமையாக ஆதரிக்கின்றோம்.

குறிப்பாக அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் உரிய வாறான பாதுகாப்பை வழங்கிய சில முக்கிய கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

# அரசு இரட்டை வேடம்! எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச்.24

ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு கருத்தைக் கூறும் அரசாங்கம், உள்நாட்டில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாதத்தைத் தூண்டும் வகையில் வேறு கருத்துக்களைக் கூறுகின்றது. அரசாங்கத்தின் இதுபோன்ற இரட்டைக் கொள்கைகள் வெட்கப்பட வேண்டியவை என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வன அழிப்பு எந்தவொரு பிரதேசத்திலும் இடம்பெறவில்லை என்று ஜனாதிபதி கூறுகின்ற போதிலும், தடுக்க முடியாத அளவுக்கு பாரிய வன அழிப்புக்கள் இடம்பெறுவதாக பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார். இவை தொடர்பில்உண்மைகளை வெளிப்படுத்துவது ஊடகங்களின்கடமையாகும். அவற்றின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அச்சுறுத்தல் விடுப்பது பாரிய தவறாகும்.

ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று பிடிவாதமாகக் காணப்பட்ட அரசாங்கம் ஜெனிவா சிக்கலை தீர்த்துக் கொள்வதற்காக அதன் தீர்மானத்தை மாற்றிக் கொண்டுள்ளது.

இதே போன்று மாகாணசபை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளாமல் தேர்தலை நடத்த முடியாது என்பதில் உறுதியாகக் காணப்பட்ட அரசாங்கம் இந்தியாவின் அழுத்தம் காரணமாக தேர்தலை நடத்துவதற்கு அவசரப்படுகிறது.



புர்காவை தடை செய்ய தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்தார். எனினும் ஜெனிவா நெருக்கடியைக் கருத்தில் கொண்டு அவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இதுபோன்ற இரட்டைக் கொள்கைகள் வெட்கப்பட வேண்டியவை. ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு கருத்தைக் கூறும் அரசாங்கம், உள்நாட்டில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாதக் கருத்துக்களையும் கூறுகின்றது. இவ்வாறான செயல்பாடுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்- என்றார். (எ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
பேபிசறோஜா
துரைராஜா

மலர்வு : 04.02.1943
இறப்பு : 04.03.2020

**ஆண்டு ஒன்று போனதம்மா
உன் அழியா நினைவில்
அபலைகள் நாம்
நீங்கா உன் நினைவில்
உன் சொந்தங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.**

23.03.2021 செவ்வாய்க்கிழமை நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் (345, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) **திருமதி பேபிசறோஜா துரைராஜா** வின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை நடைபெற்றது.

ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மதிய போசன நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல:.375, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
தொடர்புகளுக்கு: 077 543 0315

# மரண அறிவித்தல்

மலர்வு 31 - 01 - 1964



உதிர்வு 22 - 03 - 2021

## திரு.தர்மராஜதுரை குணராசன்

தும்பளை மணல் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் ஒல்லை வளவு தும்பளை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தர்மராஜதுரை குணராசன் அவர்கள் கடந்த (22.03.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற தர்மராஜதுரை சற்குணவதி தம்பதியரின் அன்பு மகனும், திருமதி ரஜனி குணராசன் அவர்களின் அன்புக் கணவனும், திருமதி தேவகி முரளீதரனின் சகோதரரும், திருமதி நர்மிலா ஹரிதாஸ், திரு.குணராசன் தனேஸ்குமார் ஆகியோரின் தந்தையும், தனுஷாந், அர்த்தனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக தும்பளை கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தனேஸ் - 076 372 0173, ஹரிதாஸ் - 077 923 8935**

# ரொஹிங்கிய அகதி முகாமில் தீ எழுவர் பலி 50,000 பேர் பாதிப்பு!



டாக்கா, மார்ச் 24

பங்களாதேஷில் ரொஹிங்கிய அகதி முகாமில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர். சுமார் 50 ஆயிரம் பேர் வசிப்பிடங்களை இழந்துள்ளனர்.

மியன்மாரில் 2017ஆம் ஆண்டு ரொஹிங்கிய முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதனால், இடம்பெயர்ந்த சுமார் 10 இலட்சம் ரொஹிங்கியர்கள் அயல்நாடான பங்களாதேஷில் தஞ்சமடைந்தனர்.

அவர்கள் பங்களாதேஷின் தென்கிழக்கு காக்ஸ் பஜார் மாவட்டத்தில் மிக நெருக்கடியான முகாம்களில் வாழ்கின்றனர். அங்கு அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்நிலையில் திங்கட்கிழமை பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள், தன்னார்வலர்கள் 10 மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் இதில் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடிசைகள் தீயில் எரிந்தன. இதனால், சுமார் 50ஆயிரம் பேர் வசிப்பிடங்களை இழந்தனர்.

இதேவேளை, இந்த விபத்தில் இரு குழந்தைகள், ஒரு பெண், 4 ஆண்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். எனினும், உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

இந்த விபத்தால் அனைத்தையும் இழந்த மக்களுக்குத் தேவையான உணவு வழங்கப்பட்டுள்ளது. தன்னார்வலர்கள் அனைத்து மனிதாபிமான ஆதரவுகளையும் வழங்க முயன்று வருகின்றனர் என்று அகதிகள் விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குடிசை ஒன்றிலிருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து தீப்பற்றியதிலேயே இந்த விபத்து நேர்ந்ததாக முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக அப்பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி காசி சலாவுதீன் தெரிவித்துள்ளார். (ஐ)



## ஒன்றரை ஆண்டுகளின் பின்னர் நேட்டோ நாடுகள் கூடுகின்றன!

பிரஸல்ஸ், மார்ச் 24

ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு நேட்டோ கூட்டமைப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் நேரடியாக சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

வடக்கு அத்லாண்டிக் வர்த்தக ஒருங்கமைவு எனப்படும் 30 நாடுகளை சேர்ந்த கூட்டமைப்பானது 'நேட்டோ கூட்டமைப்பு' என்று அழைக்கப்படுகிறது. ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த அமைப்பின் கூட்டமானது கடந்த 2019-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக கடந்த ஆண்டு கூட்டம் நடத்தப்படவில்லை. இந்நிலையில், நேட்டோ கூட்டமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நேரடியாக சந்தித்து

பேச்சு நடத்தவுள்ளனர். இந்த சந்திப்பானது பிரஸல்ஸ் நகரில் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த சந்திப்பில் நேட்டோ கூட்டமைப்பின் இராணுவ பலத்தை வலுப்படுத்துவது, ஆப்கானில் நேட்டோ இராணுவ நடவடிக்கையின் எதிர்காலம் உள்ளிட்ட அம்சங்கள் விவாதிக்கப்படவுள்ளன. (ஐ)

# இறுக்கமான ஈஸ்டர் கட்டுப்பாடுகள் ஜேர்மனியில் ஏப்ரல் 18 வரை நீடிப்பு

## தேவாலய வழிபாடு ஒன்லைனில்!

பெர்லின், மார்ச் 24

ஜேர்மனியில் தற்போது நடைமுறையில் உள்ள பொது முடக்கக் கட்டுப்பாடுகள் ஏப்ரல் 18 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இடையில் ஈஸ்டர் திருநாளை ஒட்டி ஐந்து தினங்கள் கட்டுப்பாடு மிகத் தீவிரமாக இருக்கும் என்று ஜனாதிபதி அஞ்சேலா மெர்கல் அறிவித்திருக்கிறார்.

நாட்டின் 18 மாநில அரசுகளின் தலைவர்களோடு நேற்று முன்தினம் இரவு சுமார் பத்து மணித்தியாலங்கள் நடத்திய மரதன் ஆலோசனையின் பிறகு அவர் புதிய கட்டுப்பாடுகளை செய்தியாளர்களுக்கு வெளியிட்டார்.

ஏப்ரல் ஒன்று முதல் ஐந்து வரை வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு மக்கள் வீடுகளில் தங்கியிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஈஸ்டர் ஆராதனைகளை இணையம் வழியாக (ஒன்லைன்) நடத்துமாறு தேவாலய நிர்வாகங்களிடம் கேட்கப்பட்டுள்ளது.

வீடுகளில் விருந்துண்ண ஒன்று கூடுவோர் எண்ணிக்கை இரண்டு வீடுகளைச் சேர்ந்த வளர்ந்தவர்கள் ஐவர் என்ற கணக்கிற்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மாறுபாடடைந்த ஆபத்தான வைரஸ் திரிபு காரணமாக நாடு புதிய தொற்று அலையை எதிர் கொள்கின்றது என்று அஞ்சேலா மெர்கல் எச்சரிக்கை செய்துள்ளார். (ஐ)




## வணிக வளாகத்தில் தாக்குதல்: 10 பேர் கொலை; நால்வர் காயம்

### அமெரிக்காவில் கொடூர சம்பவம்

நியூயோர்க், மார்ச் 24

அமெரிக்காவின் வணிக வளாகம் ஒன்றில் ஆயுததாரி ஒருவர் நடத்திய தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர். 4 பேர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் கொலராடோ மாகாணம் போல்டர் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வேளை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. கடந்த வாரத்தில் இடம்பெற்ற இரண்டாவது மோசமான துப்பாக்கிச் சூட்டு சம்பவமாக இது பதிவாகியுள்ளது. முன்னதாக ஜோர்ஜியா மாகாணத்தில் மசாஜ் நிலையங்களில் ஆயுததாரி நடத்திய தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது:

வணிக வளாகத்துக்குள் நேற்றுமுன்தினம் மாலை நுழைந்த ஆயுததாரி அங்கிருந்த மக்களை பணயக் கைதியாக பிடித்துக்கொண்டார். தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், ஆயுததாரியுடன் பேச்சு நடத்தி பணயக் கைதிகளை பத்திரமாக மீட்க முயன்றனர். ஆனால், திடீரென ஆத்திரம் அடைந்த ஆயுததாரி கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதில் அந்த இடத்தில் இருந்த பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதையடுத்து வணிக வளாகத்துக்குள் அதிரடியாக நுழைந்த பொலிஸார் அயுததாரியை மடக்கிப் பிடித்தனர்.

அத்துடன், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 4 பேரை மீட்ட பொலிஸார், அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். துப்பாக்கி சூடு நடத்தியதற்கான காரணம் குறித்து கைதான இளைஞரிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அமெரிக்காவின் புலம்பெயர் தடுப்பு முகாம்களில் நெருக்கடி!

## புகைப்படங்கள் வெளியாகின!!



வாஷிங்டன், மார்ச் 24

அமெரிக்காவில் புலம்பெயர்ந்தோர் முகாம் ஒன்றில் சிறுவர்கள் உட்பட பலர் நெருக்கடியான தற்காலிக அறைகளில் இருப்பதை வெளிப்படுத்தும் படங்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து ஜனாதிபதி பைடனின் நிர்வாகம் புலம்பெயர்ந்தோருக்கு கூடுதல் வசதிகளை செய்வதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா - மெக்ஸிக்கோ எல்லையான டோனாவில் அரசாங்கத்தால் நடத்தப்படும் டெக்சாஸ் முகாமில் சுமார் ஆயிரம் பேர் தங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

பைடன் பதவியேற்ற பின்னர் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக விமர்சகர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். ஜனாதிபதியாக பதவியேற்ற கையோடு ட்ரம்பின் கட்டுப்பாடுகள் சிலவற்றை நீக்கினார்.

பைடனின் நிர்வாகம், ஆதரவற்ற குழந்தைகளை திருப்பி அனுப்பும் கொள்கையை மாற்றியமைத்தது. அவர்களை குடும்பங்களுடன் தங்க வைக்கவும், ஆதரவளிக்கவும் விருப்பம் தெரிவித்தது.

இது அமெரிக்க எல்லையில் பைடன் நிர்வாகத்துக்கு பெரும் பிரச்னையாக மாறியுள்ளது. இதனால், முகாமில் அதிக சிறுவர்கள் தங்கியுள்ளனர். அவர்களுக்கான சுகாதார, கல்வி வசதிகள் அங்கு போதியளவு இல்லை என்று கூறப்படுகின்றது. இந்நிலையிலேயே இந்தப் படங்கள் வெளியாகின என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ஷபாலி வர்மா மீண்டும் முதலிடம்!

டுபாய், மார்ச் 24

மகளிர் இருபது - 20 தரவரிசையில் இந்திய இளம் வீராங்கனை ஷபாலி வர்மா மீண்டும் முதல் இடம் பிடித்துள்ளார்.

17 வயதான ஷபாலி கடந்த வருடம் இருபது - 20 தரவரிசையில் முதலிடம் பிடித்தார். இந்நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக சிறப்பாக விளையாடியதால் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

ஷபாலி இதுவரை 21 இருபது - 20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். 2 அரை சதங்களை அடித்துள்ளார். சமீபத்தில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரு இருபது - 20 ஆட்டங்களில் 23, 47 என ஓட்டங்களை எடுத்தார். கடந்த வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருபது -20 உலகக் கிண்ணப் போட்டியில் 5 ஆட்டங்களில் 163 ஓட்டங்களை எடுத்து அசத்தினார்.

இந்திய வீராங்கனைகளில் அதிக ஓட்ட்டங்கள் எடுத்தவர் ஷபாலிதான். இந்திய வீராங்கனைகளில் மிதாலி ராஜூக்கு அடுத்ததாக முதலிடம் பிடித்த வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றார். (ஐ)

# தொடரை வென்றது நியூஸிலாந்து அணி!

கிறிஸ்ட்சேர்ச், மார்ச் 24

பங்களாதேஷ் அணியுடனான இரண்டாவது ஒருநாள் போட்டியை 5 விக்கெட்களால் வென்ற நியூஸிலாந்து தொடரைக் கைப் பற்றியது.

பங்களாதேஷ் அணி நியூஸிலாந்தில் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதல் போட்டியை நியூஸிலாந்து வெற்றி கொண்ட நிலையில், நேற்று இரண்டாவது ஒருநாள் போட்டியில் இரு அணிகளும் மோதின.

கிறிஸ்ட்சேர்ச்சில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தமீம் இக்பால் அதிரடி தொடக்கம் கொடுத்தார். அவருக்கு துணையாக லிதொன் டாஸ் களமிறங்கினார். ஆனால், அவர் ஓட்டம் எதையும் பெறாமலே ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சௌம்ய சர்கார் 32, முஸ்பிகர் ரஹீம் 34 ஓட்டங்களை எடுத்து சான்டரின் பந்தில் வீழ்ந்தனர்.

11 பௌண்ட்ரிகளுடன் 78 ஓட்டங்களை எடுத்த தமீம் இக்பால் ரன் அவுட் ஆனார். ஆனால், அடுத்து வந்த மொஹமட் மிதுன் அதிரடியாக ஆடினார். 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசிய அவர் 57 பந்துகளில் 73 ஓட்டங்களைக் குவித்தார்.



50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்த பங்களாதேஷ் அணி 271 ஓட்டங்களை எடுத்தது.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் மிட்செல் சான்டர் 2 விக்கெட்களையும், ட்ரென்ட் போல்ட், மத் ஹென்றி, ஹெய்ல் ஜமைசன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு மார்ட்டின் குப்தில், ஹென்றி நிக்கொல்ஸ் தொடக்கம் கொடுத்தனர்.

நிக்கொல்ஸ் 13, குப்தில் 20 ஓட்டங்களுடன் வெளியேற, டெவன் கொன்வே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருடன் ரொம் லதம் அதிரடி ஆட்டம் காட்டினார். இதனால் நியூஸிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது.

கொன்வே 7 பெண்ட்ரிகளுடன் 72 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினார். அடுத்து வந்த ஜேம்ஸ் நீசம் 30 ஓட்டங்களை எடுத்தார்.

48.2 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து நியூஸிலாந்து அணி 275 ஓட்டங்களைப் பெற்று போட்டியை வெற்றி கொண்டது. இதன் மூலம் தொடரையும் வெற்றி கொண்டது.

இதில், லதம் 108 பந்துகளில் 10 பௌண்ட்ரிகளுடன் 110 ஓட்டங்களையும், டரில் மிட்செல் 12 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் முஸ்பிர் ரஹ்மான், மஹெடி ஹசன் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர். (ஐ)



## லாராவை வீழ்த்துவது எப்படி?

### அஸ்வின் கேள்வி!

சென்னை, மார்ச் 24

“தென்னாபிரிக்க வீராங்கனை லாராவை ஆட்டமிழக்கச் செய்வது எப்படி,’ என்று நகைச்சுவையாகக் கேட்டுள்ளார் இந்தியாவின் சுழல் பந்து வீச்சாளர் அஸ்வின்.

இந்தியாவில் விளையாடிய தென்னாபிரிக்க பெண்கள் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தற்போது நடக்கும் மூன்று போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரையும் 2- 0 என தட்டிச் சென்றது. தென்னாபிரிக்க அணியின் இளம் வீராங்கனை லாரா வோல்வார்ட் (வயது 21) ஒருநாள் தொடரில் 5 போட்டிகளில் 151 ஓட்டங்களை எடுத்தார். இருபது-20 தொடரில் முதல் 2 போட்டிகளில் 62 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதுகுறித்து இந்திய டெஸ்ட் அணியின் ‘நம்பர்-1’ சுழல்பந்துவீச்சாளர் அஸ்வின் தனது ருவிட்டர் பக்கத்தில், ‘‘தென்னாபிரிக்க வீராங்கனை லாரா வோல்வார்ட்டை ஆட்டமிழக்க செய்யும் முறைகள் என்ன, இவருக்கு நடுவர் ‘சொப்ட் சிக்னல்’ கொடுத்து அவுட்டாக்க முடியுமா?’ என நகைச்சுவையாக கேட்டிருந்தார்.

இதற்குக் கருத்திட்ட இங்கிலாந்து வீராங்கனை அலெக்சாண்ட்ரா ஹார்ட்லே, ‘இதைத்தான் நாங்கள் எதிர்பார்த்தோம். இதுதான் விடயம், பெண்கள் கிரிக்கெட் மீது உண்மையான ஆர்வம் ஏற்பட்டுள்ளதை காட்டுகிறது. அஸ்வினைத் தொடர்ந்து எல்லோரும் இதை பின்பற்ற வேண்டும்,” என தெரிவித்தார். (ஐ)

## இலங்கையுடனான டெஸ்ட்: மேற்கிந்தியா முன்னிலை!

அன்டிகுவா, மார்ச் 24

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் 99 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சென்றுள்ள இலங்கை அணி தற்போது முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றது.

ஞாயிற்றுக்கிழமை இரவு (இலங்கை நேரம்) ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் ஆடிய இலங்கை அணி 169 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதைத் தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் நாள் ஆட்டம் முடிவில் விக்கெட் இழப்பின்றி 13 ஓட்டங்களை ஏடுத்தது.

நேற்று முன்தினம் இரவு ஆட்டம் தொடங்கிய போது மேலதிகமாக ஓட்டம் எதனையும் எடுக்காமலேயே பிராத் வெயிட் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கேம்பெல்லுடன் இணைந்த பொன்னர் இலங்கையின் பந்து வீச்சை சமாளித்து ஆடினார். இருவரும் இணைந்து ஓரளவு சிறப்பான ஓட்டத்தை சேர்த்த நிலையில், பொன்னர் 31 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பிராத் வெயிட் 42, கெய்ல் மேயர்ஸ் 45, ஜோசுவா டா சில்வா 46 ஓட்டங்களைப் பெற மேற்கிந்தியத் தீவுகள் அணி முன்னிலை பெற்றது.



தொடர்ந்து இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் 8 விக் கெட்கள் இழப்புக்கு 268 ஓட் டங்களைப் பெற்றது மேற்கிந் தியத் தீவுகள் அணி. இதில் ரகஹீம் கோன்வோல் 60, கெமர் ரோச் 4 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்த னர்.

இலங்கையின் பந்துவீச்சில் சுரங்க லக்மால் 5, துஷ்மந்த சாமிர 2 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளனர். (ஐ)



## தேசிய அணி வீரர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு

கொழும்பு, மார்ச் 24

2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழா மற்றும் பொதுநலவாய விளையாட்டு விழா ஆகியவற்றை மையப்படுத்தி தேசிய அளவில் அங்கம் வகிக்கும் வீர, வீராங்கனைகளுக்கு மாதாந் தம் ஒரு இலட்சம் ரூபா வழங்குவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் யோசனைக்கு அமைய செயல்படுத்தப்படவுள்ள இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக வீர, வீராங்கனைகளை தொழில்சார் ரீதியில் தயார்படுத்தி, அவர்களை சர்வதேச தரத்தில் பதக்கங்களை வென்றெடுக்கச் செய்வதே பிரதான நோக்கமாகும்.

அந்தவகையில், மெய்வல்லுநர், பளு தூக்கல்,குத்துச் சண்டை, ஜூடோ, நீச்சல், பெட்மின்டன் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கும் பரா (விசேட தேவையுடையோர்) போட்டிகளிலிருந்து 60 பேருக்கு மாதாந்த கொடுப்பனவாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

போட்டியாளர்கள், தங்களை மேலும் திறம்பட வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சி நடவடிக்கைகளுக்காகவே இந்த ஒரு இலட்சம் ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. அத்துடன், போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்காக 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தனிமைப்படுத்தல் விதிமீறிய மூவாயிரத்து 386 பேர் கைது

## மூவாயிரத்து 350 பேருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, மார்ச் 24

தனிமைப்படுத்தல் விதிகள் தொடர்பான கண்காணிப்பு பொலிஸாரால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய ஐவர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் பேச்சாளர், பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த வருடம் ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இது வரையில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் 3,386 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 3,350 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 3 வாரங்களில் தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்கள் ஆரம்பமாகவுள்ளது.

இதன் காரணமாக பல்வேறு தேவைகளின் நிமித்தம் பொது மக்கள் வெளியிடங்களுக்குச் செல்லக் கூடும்.

இவ்வாறு வெளியிடங்களுக்குச் செல்லும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் முகக்கவசம் அணிவதோடு, சமூக இடைவெளியைப் பேணுமாறு அறிவுறுத்துகின்றோம்.

நாம் ஒவ்வொருவரும் கொரோனா தொற்றுக்குள்ளாகாதவர்களாக இருந்தால் மாத்திரமே தமிழ் - சிங்கள புத்தாண்டு பிறப்பை மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியும்.

எனவே, சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை முறையாகப் பின்பற்றுமாறு வலியுறுத்துகின்றோம்- என்றார். (எ)

# அரசின் மீது கத்தோலிக்க மக்கள் சந்தேகம் கொள்வது அநாவசியம்



## அமைச்சர் ஜோன்ஸ்டன் விளக்கம்

கொழும்பு, மார்ச் 24

**ஏப்ரல் - 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் யோசனைகள் அனைத்தும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.**

**அந்த அறிக்கையின் யோசனைகள் மீது கத்தோலிக்க மக்கள் சந்தேகம் கொள்வது அநாவசியமானது. குற்றவாளிகளைப் பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது என நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

ராகமை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

'ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையாக சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபரே தீர்மானிப்பார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் அனைத்தும் முழுமையாகச் செயல்படுத்தப்படும். இவ்விடயத்தில் கத்தோலிக்க மக்கள் சந்தேகம் கொள்வது அநாவசியமானது.

ஏப்ரல் - 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான விசாரணை அறிக்கையை கொண்டு எதிர்த்தரப்பினர் பாராளுமன்றிலும், பொது மேடைகளிலும் அரசியல் இலாபம் தேடிக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

அறிக்கையில் குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்பட்டு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பாதுகாத்துக்கொள்ள மக்களுக்கு துரோகமிழைக்க முடியாது. பேச்சுவார்த்தைகள் மூலம் பல விடயங்களுக்குத் தீர்வு காண்பது அவசியமானதாகவும் காணப்படுகிறது.

அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் போது இயற்கை வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படுவது பொதுவானதாகக் காணப்படுகிறது.

இயற்கையை பாதுகாக்க அரசாங்கம் பல செயல்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. கிராமப் புற மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை கொழும்பில் இருந்துகொண்டு சுற்றுச் சூழல் அழிப்பு என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சுற்றுச்சூழல் பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றனர்.

நாட்டு மக்கள் உண்மைத் தன்மையை அறிவார்கள். குறுகிய மட்டத்தில் இருந்துகொண்டு செயல்படும் போது அனைத்து விடயங்களும் விமர்சனத்துக்குள்ளாக்கப்படும். போலிக் குற்றச்சாட்டுக்களால் அரசாங்கம் முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகளைத் தடுக்க முடியாது'- என்றார். (எ)

# போதைப்பொருள் கடத்தல்! 110 சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, மார்ச் 24

போதைப்பொருள் கடத்தல் மற்றும் நுகர்தல் தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது.

இதற்கமைய நேற்று முன்தினம் திங்களன்று நாட்டின் பல பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் போதைப்பொருளுடன் தொடர்புடைய 110 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடற்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய பளை பொலிஸ் அதிகாரிகளால் அப்பிரதேசத்தில் 239 கிலோ கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா தொகையை கொண்டு சென்ற சிறிய ரக வாகனமொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கமைய 7 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர். பளை பொலிஸாரால் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை எல்பிட்டிய பொலிஸாரால் 3 கிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவரும், முகத்துவாரம் பொலிஸாரால் 4 கிராம் ஹெரோயினுடன் மற்றுமொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றார். (எ)

# 'சூழற்படுகொலையில் கோட்டா அரசாங்கம்'

யாழ்ப்பாணம், மார்ச் 24

சிங்கராஜாக் காடு உலகில் எஞ்சியிருக்கும் மிகத்தொன்மையான மழைக் காடுகளில் ஒன்று. இதனைக் கருத்தில் கொள்ளாது, இந்த ஆதிக் காட்டுக்குள்ளே இரண்டு பாரிய நீர்த் தேக்கங்களை அமைக்கும் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றது. இவற்றை நிர்மாணிப்பதற்காகச் சீன நிறுவனமொன்றுடன் ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது. உலகின் உயிர்ப் பல்வகைமை மிக்க வெகுசில இடங்களில் ஒன்றாகப் பாதுகாக்கப்படும் சிங்கராஜாக் காட்டைச் சீர்குலைப்பது சூழற்படுகொலையே அன்றி வேறல்ல என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்ட காடழிப்புக்கு எதிரான போராட்டம் தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# இரு மலசல கூடங்களை காணவில்லை! வவுனியா நகரிலுள்ளோர் அசௌகரியம்

வவுனியா, மார்ச் 24

வவுனியாவில் இரு மலசல கூடங்களைக் காணவில்லை. அதனை ஆக்கிரமித்து வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் நகரிலுள்ளவர்கள் மலசல கூடங்களுக்கு செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் நகர சபைக்குச் சொந்தமான மலசல கூடம் எவ்வாறு காணாமல் போயுள்ளது? எனக் கேள்வியெழுப்பியுள்ள மக்கள், அந்த மலசல கூடங்களை மீட்டுத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா நகர பிதாவாக ஜி.ரி.லிங்கநாதன் கடமையாற்றிய போது இந்த இரு மலசல கூடங்களும் நகரில் அமைந்திருந்தன. அதன் பின்னர் மெல்ல மெல்ல அப்பகுதியிலுள்ளவர்களால், அக்காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு, மலசல கூடங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நகரில் இரு முக்கியத்துவம் மிக்க பகுதிகளான கந்தசாமி கோவில் வீதி அருகே வர்த்தக நிலையம் அமைந்துள்ள பகுதி முன்னர் மலசல கூடமாக மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். அத்துடன் ஹொறவப்பொத்தான வீதி சூசைப்பிள்ளையார் குளம் சந்திக்கு அருகே அமைக்கப்பட்ட மலசல கூடமும் காணாமல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நகரில் காணப்பட்ட நகர சபைக்குச் சொந்தமான இரு மலசல கூடங்கள் காணாமல் போயுள்ளதுடன் அதன் காணிகளும் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு எதிராக எவ்வித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒவ்வொரு தடவைகளும் நகரை பொறுப்பேற்பவர்களால் இவ்வாறு ஒவ்வொரு காணிகளும், நகர சபைக்குச் சொந்தமான இடங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இவ்வாறு நகர சபையின் கட்டுப்பாட்டிலிருந்த மலசல கூடங்களை மீட்டு நகரிலுள்ளவர்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்படுவதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறும் மேலும் கோரப்பட்டுள்ளது. (எ)

# தலவாக்கலையில் விபத்து: மகள் பலி! தாய் படுகாயம்

தலவாக்கலை, மார்ச் 24

தலவாக்கலை - சென்.கிளயார் - டெவோன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 25 வயது யுவதியொருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 5.20 மணியளவில் இடம்பெற்றது என திம்புள்ளை ? பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். லொறியும், ஓட்டோவும் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான லொறியும், கொழும்பிலிருந்து நானுஓயா நோக்கிப் பயணித்த ஓட்டோவுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த யுவதியே உயிரிழந்தார். யுவதியின் தாய் படுகாயமடைந்துள்ளார்.

மேலும், ஓட்டோச் சாரதிக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் உயிரிழந்த கணேஷன் நித்யாவின் (வயது-25) சடலம் கொட்டகலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஓட்டோச் சாரதிக்கு நித்திரை ஏற்பட்டமையே இந்த விபத்துக்கான காரணமாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பில் ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, லொறிச் சாரதியை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

ஈழநாடு
Eelanadu

# “மாகாணசபை முறையை ஒழிக்குமாறு அமைச்சரவையிலும் வலியுறுத்துவேன்”

## அமைச்சர் சரத் வீரசேகர கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 24

**மாகாணசபை முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்ற எனது நிலைப்பாடு ஒருபோதும் மாறாது. அதற்காக தொடர்ந் தும் குரல் கொடுப்பேன். அமைச்சரவையிலும் கருத்துகளை முன்வைப்பேன் - என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

மாகாணசபை முறைமைக்கு அமைச்சர் சரத் வீரசேகர கடும் எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றார். ஆனாலும் தேர்தல் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. இது தொடர் பில் எழுப்பப்பட்ட கேள்வி யொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“மாகாணசபை முறைமையை ஒழிப்பேன் என நான் கூறவில்லை. அம்முறைமைக்கு எதிரானவன் நான். எனவே, குறித்த முறைமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமானால் அதற்கு முழு ஒத்து ழைப்பையும் வழங்குவேன்.

மாகாணசபை முறைமை தொடர்பில் பாராளுமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும். இவ்விவகாரம் தொடர் பில் அமைச்சரவையில் கலந்துரையாடும் போது எனது கருத்துகளை முன்வைப்பேன். மாகாணசபை முறைமை தொடர்பான எனது எதிர்ப்பு ஒருபோதும் மாறாது.” - என்றும் அமைச்சர் சரத் வீரசேகர கூறினார். அதே வேளை, புர்கா தடை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள் விக்கு பதிலளித்த அவர்,

“அதற்கான அமைச்சரவைப்பத் திரத்தில் கையொப்ப மிட்டுள்ளேன். முன்கூட்டியே ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையி லேயே அமைச்சரவைக்கு பத்திரம் வரும். அந்தவகையில்தான் தாமதம் ஏற்பட் டுள்ளது. எனினும், ஒரிரு வாரங்களில் அமைச்சரவைக்கு குறித்த பத்திரம் நிச்சயம் வரும்.” - என்றார்.

# அரசுக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்த எதிரணியினர் முயற்சி!

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

எதிர்க்கட்சி தனது தந்திரோபத்தின் ஊடாக அரசாங் கத்திற்கு எதிராக வாக்கெடுப்பு நடத்த முயற்சிக்கின்ற தென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ரெஜி ரணதுங்க நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறியுள்ளதாவது-

“கோட்டபாய ராஜபக்?ஷ தலைமையிலான எமது அரசாங்கம் தேர்தல் சார்ந்த அரசாங்கம் அல்ல. நாங்கள் கொள்கை நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயல்பாடு களை தொடர்ந்து முன்னெடுத்து செல்கின்றோம்.

இதேவேளை, காடழிப்பு என்பது இன்று சமூக ஊட கங்களில் ஒரு முக்கிய தலைப்பாகிவிட்டது. நாங்கள் காடுகளை அழிக்க ஆட்சிக்கு வரவில்லை.

வன வளங்களை பாதுகாக்க நாம் எப்போதும் உழைக் கிறோம். ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட பேரழிவுக்கு அரசாங் கத்தை குற்றம் சாட்டி, நாட்டின் வாக்கெடுப்பை மாற்ற எதிர்க்கட்சி முயற்சிக்கிறது. அவர்களின் தந்திரோபாயம் அரசாங்கத்திற்கு எதிராக வாக்கெடுப்பை நடத்துவதாகும்.

வெளிநாடுகளில் காடழிப்பு புகைப்படங்களைப் பயன்படுத்தி, நாட்டில் காடழிப்பு நடைபெறுகிறது என்பதை சில சமூக ஊடகங்கள் காட்ட முயற்சிக்கின் றன. இவற்றால் ஏமாறவேண்டாம் என்று சொல்கிறேன்.

இந்த நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அரசாங்கம் எதனையும் செய்யாது“-என்றார்.

# பொறுப்புக்கூறலை அடைவதற்கான முக்கியமான ஒரு முன்னேற்றப்படி!

## ஜெனிவா தீர்மானம் குறித்து கனடா எம்.பி. ஹரி ஆனந்தசங்கரி



ரொரன்ரோ. மார்ச் 24

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை யின் தீர்மானம் இலங்கை யில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல் களுக்குப் பொறுப்புக் கூறலை அடைவதற்கான முக்கியமான ஒரு முன் னேற்றப்படியாகும். பொறுப்புக்கூறலை முன் னேற்றுவதற்கு இலங்கை தவறியுள்ளதை இந்தத் தீர் மானம் காட்டுகிறது” என கனடாவின் ஸ்காபறோ-ரூஜ் பார்க் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

“இந்தத் தீர்மானம் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் கண்காணிப்பில் மேல திகமாக சுதந்திரமான, சர்வதேச விசாரணை ஒன்றை உருவாக்கிறது. இந்தத் தீர்மானம், மேலதிக பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளுக்கான மூலோபாயங்களை முன்வைக்குமாறும், பேரவைக்குக் கிரமமாக அறிக்கை யிடுமாறும் உயர் ஆணையாளருக்கு ஆணையிடுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை 2009 ஆம் ஆண்டு இந்த விடயத்தை எடுத்துக்கொண்ட பின்னர் நிறைவேற்றப்பட்ட மிகப் பலமான தீர்மானமாக இது அமைகிறது.

இலங்கை குறித்த மையக் குழுவின் நாடுகளின் கடின உழைப்பையும், அவர்கள் வழங்கிய தலைமைத்துவத் தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தீர்மா னத்தைப் பலப்படுத்தி நிறைவேற்றுவதற்கு ஜெனிவா விலும், கொழும்பிலும் உள்ள கனேடிய தூதரகங்களும், கனேடிய வெளியுறவு அமைச்சர் மார்க் கார்னோவும், நாடாளுமன்ற செயலாளர் றொப் ஒலிஃபண்டும், மையக் குழுவுடன் இணைந்து கவனத்துடன் பணியாற் றினார்கள். அவர்களது முயற்சிகளுக்கு நான் அவர் களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.”

# ஐ. நா. தீர்மானத்தில் இந்தியா விலகியமை பச்சை துரோகம்!



சென்னை, மார்ச் 24

மனித உரிமைகள் பேர வையில் இலங்கை தொடர் பான பிரேரணையில் இந் தியா வாக்காளிக்காமல் விலகி யமை மன்னிக்க முடியாத பச்சைத் துரோகம் என்று மறு மலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் வைகோ கூறியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் வெளியிட்ட கண்டன அறிக்கையில்,

“இலங்கைத் தீவில் சிங்கள இனவாத அரசு, ஈழத்தமி ழர்களுக்கு எதிராக நடத்தியது போர் குற்றம் அல்ல, அப்பட்டமான இனப்படுகொலை.

“இதுகுறித்து, சர்வதேச சமுதாயம் தன் கடமையில் தவறியது. எனினும், அண்மையில் பிரிட்டன், ஜேர்மனி, கனடா, வடக்கு மசிடோனியா, மொன்டிநீக்ரோ, மலாவி ஆகிய ஆறு நாடுகள் இலங்கையின் போர் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ. நா. மனித உரிமைக் பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தன. இந் திய அரசு, இலங்கையை ஆதரிக்கும் என்று இலங்கை வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே கூறியி ருந்தார்.

“இதேபோல இன்று, இந்திய அரசின் பிரதிநிதி வாக் கெடுப்பில் பங்கெடுக்காமல் வெளிநடப்புச் செய்தார். இது ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசு செய்த மன்னிக்க முடியாத பச்சை துரோகம் ஆகும். தமிழ்நாட்டில் தேர் தல் நடப்பதால், ஏமாற்றுவதற்காக வெளிநடப்புச் செய் தார்கள். இல்லையேல், இலங்கைக்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பர். இந்திய அரசு செய்த துரோகத்துக்கு என்னுடைய பலத்த கண்டனத்தைத் தெரிவித்துக் கொள் கின்றேன்” - என்றுள்ளது. (ஐ)

# விசேட புற்றுநோய் சிகிச்சை நிலையம் இன்று திறப்புவிழா!

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் விசேட புற்றுநோய் சிகிச்சை நிலையம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

புற்றுநோய் அபாயத்தைக் கட்டுப்படுத்த நாடளா விய செயல்திட்டமாக இந்த நிகழ்வு முன்னெடுக்கப் படுகிறது என்று யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

புற்றுநோய் சந்தேகம் உள்ளவர்கள் இந்த நிலை யத்தை அணுகுவதன் மூலம் தமது நோய் தொடர்பி லான தெளிவான பரிசோதனை முடிவுகளை ஒரே நாளில் பெற்றுக்கொள்ளத்தக்கதாக இந்த சேவை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

வேலையாள் தேவை
போட்டோ கொப்பி & Phone Reload கடைக்கு பெண் காசாளர் தேவை. தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் முன்)
077 875 7860







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்


### DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : பாரதீ - பெண்கள் உளவியல்



12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**
7.00 மணி : COFFE WITH பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



10.00 மணி : யாவரும் கேளீர்

### DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

### DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

### கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

### ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஞானவைரவர் கோவில்
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி கோவில்
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஞானவைரவர் கோவில்

### CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

### Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்